# பஞ்சாகமங்கள்

பாடம் 11

## யாத்திராகமத்தைப் பற்றிய ஒரு கண்ணோட்டம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய  எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட  நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு  மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை  பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு  வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல்  பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்

முன்னுரை ........ 1
ஆரம்பப் பரிசீலனைகள் ........ 2
**நூலாசிரியர்** ........ 2
**தறுவாய்** ........ 4
**ஆதி அர்த்தம்** ........ 5
பின்னணிகள் ........ 8
மாதிரிகள் ........ 8
முன் நிழலிடுதல்கள் ........ 9
**நவீன காலப் பிரயோகம்** ........ 14
அமைப்பும் பொருளடக்கமும் ........ 17
**எகிப்திலிருந்து விடுதலை (யாத்திராகமம் 1:1–18:27)** ........ 18
விடுதலைக்கு முன் (1:1-4:31) ........ 18
விடுதலையின்போது (5:1-18:27) ........ 21
**கானானுக்கு செல்வதற்கான ஆயத்தம் (யாத்திராகமம் 19:1-40:38)** ........ 25
இஸ்ரவேலின் உடன்படிக்கை (19:1-24:11) ........ 26
இஸ்ரவேலரின் ஆசரிப்புக்கூடாரம் (24:12-40:38) ........ 30
முக்கிய கருப்பொருள்கள் ........ 34
**உடன்படிக்கை காப்பாளர் (1:1–4:31)** ........ 36
**வெற்றிகரமான போர்வீரர் (5:1–18:27)** ........ 40
எகிப்தில் மோசே ........ 40
அணிவகுத்தலில் (13:17–18:27) ........ 42
**உடன்படிக்கைச் சட்டத்தை வழங்குபவர் (19:1–24:11)** ........ 44
**தற்போதைய யுத்தவீரர் (24:12-40:38)** ........ 48
முடிவுரை ........ 53



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஒவ்வொரு நிறுவனமும் மாற்றங்களைச் சந்திக்கிறது. ஆனால் தலைமைப் பொறுப்பு ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குச் செல்லும் போது இந்த மாற்றங்கள் இடையூறுகளை ஏற்படுத்தக்கூடும். ஒரு தேவாலயத்தின் கடைசி நிறுவன உறுப்பினர் இறந்துவிட்டால், அல்லது ஒரு வணிகத்தின் தொழில்முனைவோர் ஒய்வு பெறும்போது, அப்பொறுப்பிற்கு வருபவர்கள் புதிய சவால்களை எதிர்கொள்கின்றனர். எனவே, எப்போதும் எழும் ஒரு கேள்வி என்னவென்றால்: முந்தைய தலைமுறையின் முன்னுரிமைகள் மற்றும் நடைமுறைகளை புதிய தலைமுறை எந்த அளவிற்குப் பின்பற்ற வேண்டும்? என்பதே.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லையில் முகாமிட்டிருந்த இஸ்ரவேல் மக்கள் பல வழிகளில் இக்கேள்வியை எதிர்கொண்டனர். மோசே தனது வாழ்க்கையின் முடிவை விரைந்து நெருங்கிக் கொண்டிருந்தார். இஸ்ரவேலர்கள் பல புதிய சவால்களை எதிர்கொண்டு இருந்தனர். எனவே மோசே அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த முன்னுரிமைகள் மற்றும் நடைமுறைகளை அவர்கள் எந்த அளவிற்குத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் வேறு வழியைப் பின்பற்ற வேண்டுமா? அல்லது அவர்கள் மோசேயின் வழிகளில் தொடர வேண்டுமா? யாத்திராகமம் என்று இப்போது நாம் அழைக்கும் வேதாகமத்தின் இரண்டாவது புத்தகம், இந்தக் கேள்விகளுக்கும் இதே போன்ற ஏனைய கேள்விகளுக்கும் பதிலளிக்க வடிவமைக்கப்பட்டதாகும்.

இந்தப் பாடம் வேதாகமத்தின் இரண்டாவது புத்தகத்தை உள்ளடக்கிய பஞ்சாகமகங்களின் ஒரு பகுதியைப் பார்க்கிறது. நாம் அதற்கு ”யாத்திராகமத்தைப் பற்றிய ஒரு கண்ணோட்டம்” என்று தலைப்பிட்டுள்ளோம். இப்பாடத்தில் நாம் பல அடிப்படைச் சிக்கல்களை ஆராய்வோம். இது யாத்திராகமம் முதன்முதலில் என்ன அர்த்தத்தில் எழுதப்பட்டது என்றும், இன்று அதை நம் வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை இன்னும் ஆழமாகப் பார்க்க நம்மைத் தயார்படுத்தும்.

நம்முடைய பாடம் மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், யாத்திராகமத்தைப் படிக்கும்போது நாம் முன் வைக்க வேண்டிய சில ஆரம்பப் பரிசீலனைகளைப் பார்ப்போம். இரண்டாவதாக, புத்தகத்தின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை ஆராய்வோம். மூன்றாவதாக, யாத்திராகமத்தின் சில முக்கிய கருப்பொருள்களைப் பார்ப்போம். இப்போது நாம் சில ஆரம்பப் பரிசீலனைகளை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# ஆரம்பப் பரிசீலனைகள்

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக நாம், யாத்திராகமப் புத்தகம் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டது என்றும், அது தேவனுடைய வார்த்தை என்றும் நாம் உறுதியாக விசுவாசிக்கிறோம். நாம் ஒரு சாதாரணப் புத்தகத்தைக் கையாளவில்லை என்பதை இந்த விசுவாசம் நமக்கு நினைவூட்டுகிறது. யாத்திராகமம் என்பது தேவன் தம் ஜனங்களுக்கு வழங்கிய பரிசுத்த வேதமாகும். எனவே, ஏதோ ஒரு வகையில், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய உங்கள் மீதும் என் மீதும் இன்று, இந்தப் புத்தகம் அதிகாரம் கொண்டுள்ளது. ஆனால் அதே சமயத்தில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களுக்கு தேவன் இப்புத்தகத்தை முதலில் கொடுத்தார் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. எனவே, முதலில் எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தின் நோக்கத்திற்கு நம்முடைய நவீனப் பயன்பாடுகள் உண்மையாக இருப்பதை உறுதி செய்வது முக்கியமாகும்.

நாம் யாத்திராகமத்தைப் பார்க்கத் தொடங்கும்போது நான்கு வெவ்வேறு ஆரம்பப் பரிசீலனைகளை அறிமுகப்படுத்துவோம். முதலில், நாம் அதன் எழுத்தாளரைக் குறித்துப் பார்ப்போம். புத்தகத்தை எழுதியது யார்? என்று பார்ப்போம். இரண்டாவதாக, இப்புத்தகம் எப்போது, எங்கு, என்ன சூழ்நிலையில் எழுதப்பட்டது என்பதை ஆராய்வோம். மூன்றாவதாக, யாத்திராகமத்தின் உண்மையான அர்த்தத்தை சுருக்கமாகக் கூறுவோம். நான்காவது, இப்புத்தகத்தின் விஷயங்கள் நம்முடைய நவீனப் பயன்பாட்டிற்கு எவ்வாறு வழிகாட்ட வேண்டும் என்பதை நாம் கையாள்வோம். யாத்திராகமத்தின் படைப்புரிமையை முதலில் பார்ப்போம்.

## நூலாசிரியர்

யாத்திராகமத்தின் படைப்புரிமையைப் பற்றிய கேள்வியானது, பஞ்சாகமங்கள் முழுவதுமாக எழுதப்பட்டதன் மீதான நீண்ட மற்றும் சிக்கலான விவாதத்தின் ஒரு பகுதியாகும். ஆனால் இப்பாடத்தில், இந்த விவாதம் யாத்திராகமத்திற்குப் பொருந்தக்கூடிய சில வழிகளை நாம் குறிப்பிடுவோம்.

யாத்திராகமத்தின் சுருக்கமான வாசிப்பு, குறைந்தபட்சம், மோசேக்கு இப்புத்தகத்தின் பொருளடக்கத்துடன் நிறைய தொடர்பு இருப்பதாக நமக்குச் சொல்கிறது. பெரும்பாலானவற்றை சீனாய் மலையில் மோசேக்கு தேவன் நேரடியாக வெளிப்படுத்தியதாக யாத்திராகமம் மீண்டும் மீண்டும் கூறுகிறது. இது பத்து கட்டளைகள், உடன்படிக்கைப் புத்தகம் மற்றும் இஸ்ரவேலர்களின் ஆசரிப்புக் கூடாரத்திற்கான கட்டளைகளை உள்ளடக்கியது.

ஆனால், பஞ்சாகமங்களின் மற்ற பாடங்களில் நாம் பார்த்தது போல், பெரும்பாலான விமர்சன அறிஞர்கள் மோசேயின் ஆசிரியத்துவத்தை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நிராகரித்துள்ளனர். யாத்திராகமம் உட்பட பஞ்சாகமங்களின் இறையியல் மிகவும் மேம்பட்டதாக இருப்பதால் அவை மோசேயின் காலத்திலிருந்து தான் வந்ததா என்பதைக் குறித்து அவர்கள் வாதிட்டனர். அதற்குப் பதிலாக, கி.மு ஆறாம் நூற்றாண்டில் பாபிலோனுக்கு நாடுகடத்தல் முடிவடைவதற்கு முன்பு பஞ்சாகமத்தை மோசே முடித்திருக்க முடியாது என்பது அவர்களின் நிலைப்பாடாகும்.

இந்த விமர்சனக் கண்ணோட்டங்கள் பரவலாக இருந்தாலும், அவற்றின் பின்னால் உள்ள வரலாற்று மற்றும் இறையியல் அனுமானங்கள் மிகவும் ஊகிக்கக்கூடியதாகவும் நம்பமுடியாததுமாக உள்ளன. மேலும், ஒரு சுவிசேஷக் கண்ணோட்டத்தில், வேதத்தில் காணப்படும் அதிகாரப்பூர்வ சாட்சிகளை நாம் பின்பற்றுவது மிக முக்கியமாகும். பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் அனைவரும் யாத்திராகமப் புத்தகம் உட்பட முழு பஞ்சாகமங்களும் எழுதப்பட மோசே தான் காரணம் என்ற முன்னோக்குக்கு ஒருமனதாக ஒப்புதல் அளித்தனர்.

இப்போது, சுவிசேஷ சபையார் மோசேயை ”அடிப்படை,” ”உண்மையான” அல்லது ”அத்தியாவசிய” புத்தகத்தின் எழுத்தாளர் என்று அழைப்பதன் மூலம் மோசேயால் எழுதப்பட்ட படைப்புரிமையைக் குறித்ததான இந்த நம்பிக்கையைச் சரியாகத் தகுதிப்படுதியுள்ளனர். இதன் பொருள், மோசே வெறுமனே உட்கார்ந்து, யாத்திராகமம் அனைத்தையும் தன் கையால் எழுதுயிருப்பதற்குச் சாத்தியம் அதிகமில்லை. ஆனால் மோசேயுடைய பிறப்பு மற்றும் சிறுவயது சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைத் தவிர இப்புத்தகத்தில் பதிவாகியிருக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் மோசே ஒரு நம்பகமான நேரில் கண்ட சாட்சியாக இருந்தார். அவர் தனது நாட்களிலிருந்த தேசியத் தலைவர்களின் வழக்கத்தைப் பின்பற்றி, தனது வழிகாட்டுதலின் கீழ் எழுதுவதற்கு எழுத்தாளர்களை அல்லது பேச்சை எழுத்தாக மாற்றும் நிபுணர்களை நியமித்திருக்கலாம். இருப்பினும், என்ன நடந்திருந்தாலும், மோசேயின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் யாத்திராகமம் இயற்றப்பட்டது என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

> யாத்திராகமப் புத்தகத்தை எழுதியவர் யார் என்ற கேள்வி ஒரு முக்கியமான கேள்வியாகும். மேலும் நம்மிடம் தற்போது இருக்கும் இந்தப் புத்தகத்தை நாம் படிக்கும்போதும், அது பதிவுசெய்யும் நிகழ்வுகளின் வரலாற்றை தீவிரமாக எடுத்துக் கொள்ளும்போதும், யாத்திராகமப் புத்தகத்தின் பெரும்பகுதியை மோசே எழுதவில்லை என்று நினைக்க எந்தக் காரணமும் இல்லை. அப்புத்தகத்தில் மோசே தேவனின் பிரதிநிதியாகச் சித்தரிக்கப்படுகிறார். பஞ்சாகமங்கள் மற்றும் இஸ்ரவேலர்களின் வரலாறு முழுவதும், இயேசுவைத் தவிர மோசேக்குப் பிறகு வேறு எந்தத் தீர்க்கதரிசியும் மோசே தேவனை அறிந்திருந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அளவுக்கு அறிந்திராதபடியால் மோசே ஒரு தனித்துவமான செய்தித் தொடர்பாளராகச் சித்தரிக்கப்படுகிறார். மேலும் அவர் தேவனை மிகவும் நெருக்கமாக அறிந்திருந்தபடியால், ஒரு மனிதன் தன் சிநேகிதனிடம் பேசுவது போல தேவன் அவருடன் முகமுகமாய்ப் பேசினார். எனவே ஜனங்களுக்கு தேவனுடைய செய்தித் தொடர்பாளராகும் அந்த முக்கிய பங்கைக் கொண்டிருந்தார். மேலும், பஞ்சாகமங்களுக்குப் பிறகும் பழைய ஏற்பாடு தொடர்வதால் மோசேயின் தோரா என்ற இந்தப் புத்தகத்தை மீண்டும் குறிப்பிடுகிறது. இப்புத்தகத்தை இரவும் பகலும் தியானிக்க ஜனங்களை ஊக்குவிப்பதால் மோசேயே இப்புத்தகத்தின் ஆசிரியர் என்று நினைப்பது சரியாக இருக்கிறது. காலப்போக்கில் இப்போதுள்ள இடத்தின் பெயர்கள் அல்லது சில இலக்கண வடிவங்கள் மற்றும் அது போன்ற விஷயங்களில் சில புதுப்பிப்புகள் நிகழ்ந்திருக்கலாம். அது இஸ்ரவேலில் ஒரு ஏவப்பட்ட, தீர்க்கதரிசியின் கையால் நிகழ்கிறது. ஆனால் நான், யாத்திராகமப் புத்தகம் மோசேயின் பேனாவிலிருந்து, மோசேயின் எழுத்தாணியிலிருந்து வந்தது என்று நினைக்கிறேன்…அதனால், மோசே இஸ்ரவேலில் தேவனின் முக்கிய செய்தித் தொடர்பாளராக மட்டுமல்லாமல், ஒரு படைப்பாளராக, அதாவது ஒரு புத்தகத்தை எழுதியவராகவும் சித்தரிக்கப்படுகிறார்.
>
> – Prof. தாமஸ் எகர்

மோசேயால் எழுதப்பட்ட படைப்பாற்றலைப் பற்றிய இந்த எண்ணங்களை மனதில் கொண்டு, யாத்திராகமம் எழுதப்பட்ட இரண்டாவது ஆரம்பக் கருத்தாய்வுகள், நிகழ்வு அல்லது சூழ்நிலைகளுக்கு நாம் திரும்ப வேண்டும்.

## தறுவாய்

பரந்தளவில், யாத்திராகமத்தை 3:1-4:31 இல் காணப்படும் எரியும் முட்புதரில் தனது அழைப்பிற்கும், யாத்திராகமம் 34:1-12 இல் மோவாப் சமவெளியில் அவரது மரணத்திற்கும் இடையேயான காலகட்டத்தில் மோசே எழுதினார். ஆனால் இதை விடத் துல்லியமாகப் பார்க்க நமக்குச் சான்றுகள் உதவுகிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லையில் இஸ்ரவேல் முகாமிட்டிருந்தபோது தான் இப்புத்தகம் உண்மையில் முடிக்கப்பட்டது என்பதை யாத்திராகமத்தில் குறைந்தபட்சம் இரண்டு குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன. யாத்திராகமம் 16:35 இல் நாம் இந்த வார்த்தைகளைப் பார்க்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வருமட்டும் நாற்பது வருஷமளவும் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேருமவரைக்கும் மன்னாவைப் புசித்தார்கள் (யாத்திராகமம் 16:35).

உண்மையில், இந்த நிகழ்வுகள் யாத்திராகமப் புத்தகம் எழுதி முடிப்பதற்கு முன்பே நடந்திருக்க வேண்டும். எனவே, இஸ்ரவேல் ஏற்கனவே ”நாற்பது ஆண்டுகளாக” அலைந்து திரிந்ததை நாம் அறிவோம். மேலும் அவர்கள் ”குடியேறிய ஒரு நிலத்திற்கு” அல்லது ”கானானின் எல்லைக்கு” வந்து சேர்ந்திருந்தனர்.

புத்தகத்தின் கடைசி வசனமான யாத்திராகமம் 40:38 இல் இறுதித் தொகுப்புக்கான காலத்தைப் பற்றிய ஒரு காட்சி தோன்றுகிறது:

> இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாப் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது (யாத்திராகமம் 40:38).

“இஸ்ரவேலரின் எல்லாப் பிரயாணங்களிலும்” வாசஸ்தலத்தின் மேல் இருந்த தேவனின் மகிமையான பிரசன்னத்தைப் பற்றி இந்தப் பகுதி குறிப்பிடுவதைக் கவனியுங்கள். இந்த வரலாற்றுக் குறிப்பு மோசே தனது வாழ்க்கையின் பிற்பகுதியில் யாத்திராகமப் புத்தகத்தை முடித்தார் என்பதை நிரூபிக்கிறது. இஸ்ரவேலர்கள் நாற்பது ஆண்டுகள் அலைந்து திரிந்து மோவாப் சமவெளியில் வந்து சேர்ந்த *பிறகு* அவர் இதை எழுதினார்.

இதுவரை, யாத்திராகமப் புத்தகத்தின் படைப்புரிமை மற்றும் நிகழ்வுகள் தொடர்பான பல ஆரம்பப் பரிசீலனைகளை நாம் பார்த்தோம். இப்போது, அதன் உண்மையான அர்த்தத்தை சுருக்கமாகக் கூறக்கூடிய நிலையில் இருக்கிறோம். யாத்திராகமப் புத்தகத்தை தேவன் மோசேயை எழுத வைத்தது ஏன்? மோவாப் சமவெளிகளில் தனது ஆதி இஸ்ரவேல் வாசகர்களை எவ்வாறு ஈர்க்க முடியும் என்று மோசே நம்பினார்?

## ஆதி அர்த்தம்

ஆரம்பத்திலிருந்தே, பழைய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படும் பல பொதுவான இலக்குகளை மோசே கொண்டிருந்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, யாத்திராகமம் என்பது தேவனைத் துதிக்கும் பாடல் புத்தகம் என்று கூறலாம். ஏனென்றால் அது தேவனைத் துதிக்கவும் வழிபடவும் இஸ்ரவேலைத் தொடர்ந்து வழிநடத்தியது. ஆனால் தேவனைப் பற்றிய உண்மைகளை மீண்டும் மீண்டும் விளக்குவதால் அது இறையியல் என்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எடுத்தக்கொள்ளலாம். முழுப் புத்தகமும் இஸ்ரவேலர்களின் தேசிய வாழ்க்கையை உருவாக்க வடிவமைக்கப்பட்டது என்ற அர்த்தத்தில் இதை அரசியல் எனலாம். தவறான கண்ணோட்டங்களை எதிர்ப்பதால் இது விவாதிக்கக்கூடிய ஒரு புத்தகம் எனலாம். இஸ்ரவேலர்கள் எவ்வாறு தேவனுக்குக் கீழ்ப்படிந்தனர் என்பதை இது வெளிப்படுத்துகிறபடியால் இதை நன்னெறி நூல் எனலாம். இது தேவனிடம் கொள்ளும் பற்றுறுதியை ஊக்குவித்து, பற்றுறுதியின்மைக்கு எதிராக எச்சரிப்பதால் இதை ஊக்குவிக்கும் புத்தகம் என எடுத்துக்கொள்ளலாம். இவை மற்றும் இதற்கொத்த இலக்குகள் யாத்திராகமப் புத்தகம் முழுவதையும் பொதுவாக வகைப்படுத்துகின்றன.

இந்த மற்றும் ஏனைய குணாதிசயங்களை யாத்திராகமம் பல வேதாகமப் புத்தகங்களுடன் பகிர்ந்து கொள்ளும் அதே வேளையில், யாத்திராகமத்தை எழுதுவதற்கு மோசேக்கு ஒரு தனித்துவ மற்றும் முக்கிய நோக்கம் இருந்தது. இந்த வரிகளை ஒன்றிணைக்கும் நோக்கத்தை சுருக்கமாகக் கூறுவது உதவியாக இருக்கும்:

> யாத்திராகமப் புத்தகம் முதல் தலைமுறையினரின் மீது தெய்வீகமாக நியமிக்கப்பட்ட மோசேயின் அதிகாரத்தை நியாயப்படுத்தி, இரண்டாம் தலைமுறையினர் தங்கள் வாழ்க்கையின் மீதும் மோசேயின் உறுதியான அதிகாரத்தை இருப்பதை ஒப்புக்கொள்ளும்படி வழிநடத்தியது.

இச்சுருக்கமானது யாத்திராகமத்தின் உண்மையான அர்த்தத்தை நாம் நோக்க உதவும் அமைப்பைத் தரும் மூன்று காரணிகளைத் தொடுகிறது. முதலில், இந்தப் புத்தகம் பெரும்பாலும் யாத்திராகமத்தின் முதல் தலைமுறையைப் பற்றி எழுதப்பட்டது என்பதை நினைவூட்டுகிறது. ஆனால் அதே நேரத்தில், இப்புத்தகம் யாத்திராகமத்தின் இரண்டாம் தலைமுறைக்காக எழுதப்பட்டது.

யாத்திராகமப் புத்தகத்தை நன்கு அறிந்த அனைவருக்கும் அதில் பெரும்பாலானவை மோசே இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தபோது நடந்த நிகழ்வுகளை விவரிக்கிறது என்பது தெரியும். இந்தக் காலத்தை சரித்திரத்தின் ”அந்த உலகம்” என்று நாம் அழைக்கலாம். அப்படியிருந்தும், முதல் தலைமுறையின் ”அந்த உலகம்” பற்றி யாத்திராகமம் சொல்வது எல்லாம் யாத்திராகமத்தின் இரண்டாம் தலைமுறையினருடன் பேசும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதை நாம் ”அவர்களின் உலகம்” என்று அழைக்கலாம்.

மிகச் சில பழங்கால இஸ்ரவேல் மக்களால் மட்டுமே படிக்க முடியும் என்பதை இப்போது நினைவில் கொள்வது அவசியம். எனவே, இரண்டாம் தலைமுறை ”வாசகர்கள்” பற்றி நாம் பேசும்போது, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் குழந்தையும் யாத்திராகமத்தின் ஒரு நகலை எடுத்து தாங்களே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாசித்துக் கொண்டார்கள் என்று அர்த்தம் இல்லை. மாறாக, பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளைப் போலவே, மோசே யாத்திராகமத்தை முக்கியமாக இஸ்ரவேலின் தலைவர்களுக்காக எழுதினார். யோசுவா, கோத்திர மூப்பர்கள், நியாயாதிபதிகள், ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள் போன்றவர்களுக்கே யாத்திராகம புத்தகம் அதிக முதன்மைத்துவத்தைத் தருகிறது. புத்தகத்தின் உள்ளடக்கத்தை மற்ற இஸ்ரவேலர்களுக்கு வழங்குவதும் விளக்குவதும் இந்தத் தலைவர்களின் பொறுப்பாகும். இந்தக் காரணத்திற்காக, ஒரு தேசமாக இரண்டாவது தலைமுறையினர் எதிர்கொண்ட பிரச்சினைகளை யாத்திராகமம் மிகவும் நேரடியாகக் கையாள்கிறது.

"அவர்களின் உலகம்" மீது மோசேயின் பெரும்பாலான கவனம் மறைமுகமாக இருந்தது என்பதையும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும், "அவர்களின் உலகத்தை" மனதில் கொண்டு மோசே எழுதினார் என்று நாம் நம்பும்படிக்கு, இரண்டாம் தலைமுறை போதுமான அளவிற்கு காட்சியில் வருகிறது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, யாத்திராகமம் 16:35 மற்றும் 40:38 இரண்டும் இரண்டாம் தலைமுறையைக் குறிக்கிறது. கூடுதலாக, யாத்திராகமம் 6:13-27 இல் உள்ள வம்சாவளிப் பதிவு ஆரோனின் பேரனான பினெகாஸ் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் பல வேதபகுதிகள் இரண்டாம் தலைமுறைக்கு மிகவும் பொருத்தமான விஷயங்களைப் பற்றிக் கூறுவதைப் பின்னர் பார்ப்போம். இந்த மற்றும் இதே போன்ற குறிப்புகள், மோசே இப்புத்தகத்தை எழுதியபோது யாத்திராகமத்தின் முதல் மற்றும் இரண்டாம் தலைமுறைகளை கணக்கில் எடுத்துக் கொண்டார் என்று குறிக்கிறது.

யாத்திராகமத்திற்கான மோசேயின் உண்மையான நோக்கத்தின் சுருக்கத்தின் இரண்டாவது அம்சம் என்னவென்றால், "முதல் தலைமுறை" பற்றி அது கூறிய அனைத்தும் "இரண்டாம் தலைமுறையை வழிநடத்த" எழுதப்பட்டது என்பதாகும். அதாவது, அவருடைய ஆதி இரண்டாம் தலைமுறை வாசகர்கள் தேவனுக்கு சேவை செய்வதில் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காக மோசே யாத்திராகமத்தை ஒரு முழு அதிகாரபூர்வ புத்தகமாக எழுதினார்.

நாம் யாத்திராகமத்தைப் படிக்கும்போது, மோசே தனது வரலாற்றுப் பதிவை இரண்டாம் தலைமுறைக்குப் பொருத்தமானதாக மாற்றுவதற்காகக் கவனமாக வடிவமைத்தார் என்பது தெளிவாகிறது. கானான் எல்லையில் தன்னுடன் முகாமிட்டவர்களிடம் உரையாற்ற, முதல் மற்றும் இரண்டாம் தலைமுறையினருக்கு இடையிலான பல வேறுபாடுகளை மோசே உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியிருந்தது. அவர்கள் வெவ்வேறு காலங்களிலும் இடங்களிலும் வாழ்ந்தார்கள் என்பதையும், அவர்கள் வெவ்வேறு சவால்களை எதிர்கொண்டதையும் அவர் அறிந்திருந்தார். எனவே, மோசே யாத்திராகமத்தின் ஒவ்வொரு பகுதியையும் அவர்களுக்கு இடையேயான தொடர்புகளை முன்னிலைப்படுத்தும்படிக்குத் திறமையாக வடிவமைத்தார். அவரது ஆதி வாசகர்கள் தங்களுக்கும் தங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முன்னோர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க இந்த இணைப்புகள் அனுமதித்தது.

## பின்னணிகள்

மோசே தனது புத்தகத்தின் அதிகாரத்தை அவரது ஆதி வாசகர்களுக்குத் தெளிவாக்கும்படி மூன்று வகையான அடிப்படை இணைப்புகளை உருவாக்கினார். அவரது எளிமையான இணைப்புகள் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருந்தன. இந்த வேதபகுதிகள் ஆதி வாசகர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளின் வரலாற்றுப் பின்னணிகளில் கவனம் செலுத்துகின்றன.

யாத்திராகமம் 3:8 இல் ஒரு வகையான வரலாற்றுப் பின்னணி தோன்றுகிறது, அங்கு இஸ்ரவேலுக்கான தேவனுடைய வாக்குத்தத்தம் அதன் நிறைவேறுதலுடன் இணைகிறது. இந்த வசனத்தில், இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து “பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கு” கொண்டுவருவதாக தேவன் வாக்களித்தார். அவர்கள் தங்கள் நாட்களில் இது நிறைவேற்றப்படுவதைக் காணும் விளிம்பில் இருந்தபடியால், இந்தக் கணிப்பு மோசேயின் வாசகர்களுக்குப் பொருத்தமானது.

முதல் தலைமுறைக்கான தேவனின் கட்டளைகளிலும் இரண்டாம் தலைமுறையின் அடுத்தடுத்த கடமைகளிலும் மற்றொரு வகையான வரலாற்றுப் பின்னணி தோன்றுகிறது. உதாரணமாக, யாத்திராகமம் 20:1-17 இல், முதல் தலைமுறைக்கு தேவன் பத்து கட்டளைகளை எப்படிக் கொடுத்தார் என்பதை மோசே அறிவித்தார். இந்த நிகழ்வு இரண்டாம் தலைமுறைக்கான தார்மீகக் கடமைகளின் அடிப்படையை உருவாக்கியது.

## மாதிரிகள்

வரலாற்றுப் பின்னணிகளுடன் கூடுதலாக, மோசே தனது வாசகர்களுக்கு அவர்கள் பின்பற்ற அல்லது நிராகரிக்க வேண்டிய வரலாற்று மாதிரிகளையும் வழங்கினார். இவ்வகையான தொடர்பை ஏற்படுத்த, முதல் தலைமுறை மற்றும் இரண்டாம் தலைமுறை வாசகர்களுக்கிடையே கணிசமான ஒற்றுமையை சுட்டிக்காட்ட மோசே சில வேதபகுதிகளை வடிவமைத்தார்.

பல வேதபகுதிகளில், மோசே தனது ஆதி வாசகர்கள் எதிர்மறை மாதிரிகளை நிராகரிக்கும்படி இந்த வகையான ஒற்றுமைகளைப் பயன்படுத்தினார். உதாரணமாக, சீனாய்க்கு அணிவகுத்துச் செல்லும் போது இஸ்ரவேல் மக்கள் யாத்திராகமம் 15:24, 16:2-12, மற்றும் 17:3 இல் மீண்டும் மீண்டும் முரட்டாட்டமாக முணுமுணுத்தது, இரண்டாம் தலைமுறையினர் நிராகரிக்க வேண்டிய எதிர்மறை மாதிரிகளைச் சுட்டிக்காட்டியது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதற்கு நேர்மாறாக, மோசே தனது வாசகர்கள் பின்பற்றுவதற்கு நேர்மறையான மாதிரிகளையும் வழங்கினார். உதாரணமாக, யாத்திராகமம் 36:8-38 இல் உள்ள வாசஸ்தலத்தைக் கட்டுவதற்கான தேவ கட்டளைகளுக்கு இஸ்ரவேல் மக்கள் இணங்கினர். இது பிற்காலத்தில் இரண்டாம் தலைமுறையினர் ஆசரிப்புக் கூடாரத்தில் தேவனைச் சேவிப்பதைப் பின்பற்றுவதற்கு ஒரு நேர்மறையான முன்மாதிரியைச் சுட்டிக்காட்டியது.

நேர்மறை மற்றும் எதிர்மறை குணங்கள் இரண்டையும் எடுத்துக்காட்டுகின்ற பாத்திரங்களின் கலப்பு மாதிரிகளையும் மோசே வழங்கினார். ஒரு உதாரணம், யாத்திராகமம் 7:8-13 இல், ஆரோன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பார்வோன் முன் தனது கோலை கீழே எறிந்தார். எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் விடுவிக்கப்பட்டதற்கு அவருடைய கீழ்ப்படிதல் பங்களித்தது. ஆனால், 32:1-35 இல், மக்கள் வணங்குவதற்காக ஒரு பொன்னாலான கன்றுக்குட்டியை அவர் உருவாக்கினார். அவருடைய கீழ்ப்படியாமை இஸ்ரவேலின் கடுமையான தண்டனைக்கு வழிவகுத்தது. இது இரண்டாம் தலைமுறை பார்வையாளர்கள் பின்பற்றுவதற்கும் நிராகரிப்பதற்குமான ஒரு கலவையான மாதிரியை அவர்களுக்கு அளித்தது.

## முன் நிழலிடுதல்கள்

மூன்றாவது இடத்தில், ஒரு சில சந்தர்ப்பங்களில், மோசே தனது இரண்டாம் தலைமுறை வாசகர்களின் வரலாற்று முன்னறிவிப்புகளாக அல்லது தோராய உதாரணங்களாகச் செயல்படுவதற்காக அந்த நிகழ்வுகளின் தனது பதிவை வடிவமைத்தார்.

> வேதாகமக் கதைகளில் பெரும்பாலும், நவீன திரைப்படம் மற்றும் இலக்கியத்தைப் போலவே, ஆசிரியர்களும் முன்னறிவிப்பைப் பயன்படுத்துவார்கள். இதற்கு ஒரு நல்ல உதாரணம், எகிப்தை விட்டு வெளியேறிய மோசே, கிணற்றுக்கு வந்து, எத்திரோவின் குமாரத்திகளை இந்த மோசமான மேய்ப்பர்களிடமிருந்து காப்பாற்றும்போது அல்லது விடுவிக்கும்போது, யாத்திராகமப் புத்தகத்தில் நமக்கு உள்ளது. நடந்தபடியே அப்பகுதி மோசே ஒரு விடுவிப்பாளரின் பாத்திரத்தில் இருப்பதைப் போல சித்தரிக்கிறது. ஆம், தேவன் மோசே மூலம் என்ன செய்யப் போகிறார் என்பதை இது முன்னறிவிக்கிறது. அவர் எகிப்துக்குச் சென்று தேவ ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் போகிறார்.
>
> – Dr. ராபர்ட் பி. கிஷோல்ம், Jr.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேறு சில பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் உள்ளதைப் போல இந்த வகை இணைப்பு யாத்திராகமத்தில் ஏற்படாது. ஆனால் சில சந்தர்ப்பங்களில், மோசே கடந்த கால நிகழ்வுகளை தனது ஆதி வாசகர்களின் அனுபவங்களுடன் ஏறக்குறைய சரியாகப் பொருந்தும் விதங்களில் விவரித்தார். இந்த முன்னறிவிப்புகள் வரலாற்றில் முன்னர் நடந்ததைப் போலவே இரண்டாம் தலைமுறையினரின் நாட்களில் மீண்டும் மீண்டும் நிகழும் என்பதை சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாக, யாத்திராகமம் 13:18 இல் இஸ்ரவேலர்கள் ”போருக்கு ஆயுதம் ஏந்தி எகிப்திலிருந்து வெளியேறினர்”. முதல் தலைமுறையினரின் இந்த இராணுவ ஏற்பாடு, இரண்டாம் தலைமுறையினரும் எவ்வாறு படையெடுப்பிற்குள் நுழையத் தயாராகும் இராணுவமாக ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை முன்னறிவித்தது.

இதேபோல், யாத்திராகமம் 40:34-38 குறிப்பிடுகையில், ஆசரிப்புக் கூடாரம் சரியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது, தேவன் புகை மற்றும் அக்கினியாகத் தோன்றி தமது ஜனத்தை அவர்களின் பிரயாணத்தில் வழிநடத்தினார். இந்த வரலாற்று யதார்த்தம், 40 ஆண்டுகளுக்குப் பிறகு, தேவபிரசன்னம் இரண்டாம் தலைமுறை வாசகர்களை அவர்களின் சொந்த நாட்களில் எவ்வாறு முன்னோக்கி வழிநடத்தப் போகிறது என்பதை எதிர்பார்த்தது.

நாம் இப்போது பார்த்தது போல், மோசே முதல் தலைமுறையின் வரலாற்றைப் பற்றிய தனது பதிவை இரண்டாம் தலைமுறைக்கு பின்னணியாகவும், மாதிரிகளாகவும், முன்னறிவிப்புகளாகவும் வடிவமைத்தார். தேவனுக்கு சேவை செய்ய அவர்களை வழிநடத்தும்படி அவர் இதைச் செய்தார். ஆனால் இவை அனைத்தும் யாத்திராகமத்தின் உண்மையான பொருளடக்கத்தில் மூன்றாவது, மற்றும் மிக முக்கியமான பகுதிக்கு நம்மைக் கொண்டு வருகிறது. யாத்திராகமப் புத்தகம் அடிப்படையில் மோசேயின் முதல் தலைமுறையின் மீது தெய்வீகமாக நியமிக்கப்பட்ட அதிகாரத்தை நிரூபிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. இதன்மூலம் இரண்டாம் தலைமுறையினரும் தங்கள் வாழ்க்கையில் மோசேயின் நிலைத்திருக்கும் அதிகாரத்தை ஒப்புக்கொள்வார்கள்.

இப்போது, யாத்திராகமப் புத்தகத்தில் மோசேயுடன் ஆரோன் அடிக்கடி தோன்றுவதைக் குறிப்பிடுவது முக்கியமாகும். ஆரோன் சேர்க்கப்பட்டபோதும், யாத்திராகமத்தின் ஒவ்வொரு கணிசமான பகுதியும் இரண்டாம் தலைமுறையினரை அவர்கள் மீது தொடரும் மோசேயின் அதிகாரத்தை உறுதிப்படுத்த அழைத்தது. அவர்கள் மோசேயின் இறையியல் கண்ணோட்டங்கள், அவருடைய தார்மீகக் கோட்பாடுகள், தேசியக் கொள்கைகள் போன்றவற்றுக்கு இணங்க வேண்டியிருந்தது. இந்த பாடத்தில் பின்னர், இந்த கருப்பொருள் எவ்வளவு ஊடுருவியுள்ளது என்பதை சற்று விரிவாகப் பார்ப்போம். ஆனால், இந்த இடத்தில் மோசேயின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முக்கியத்துவத்தையும் இஸ்ரவேல் மீதான அவரது அதிகாரத்தையும் வலியுறுத்தும் இரண்டு வழிகளை சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

முதலாவதாக, யாத்திராகமத்தின் நாடகத்தில் மோசே மைய இடத்தைப் பிடித்திருப்பதைப் பார்ப்பது கடினம் அல்ல. நிச்சயமாக, யாத்திராகமத்தின் முதல் இரண்டு அத்தியாயங்கள் மோசேயை உடனடியாக அறிமுகப்படுத்தவில்லை. ஆனால் யாத்திராகமம் 2:10 இல் அவருடைய பெயரை அறிந்துகொண்ட பிறகு, இப்புத்தகத்தில் நடக்கும் அனைத்தும் எப்படியாவது வெளிப்படையாக மோசேயுடன் பிணைக்கப்பட்டுள்ளன. தேவன் தமது ஜனத்தை எகிப்திலிருந்து விடுவிக்கத் தயாரானபோது, அவர் மோசேயை அழைத்தார். எகிப்தியர்களுக்கு எதிரான ஒவ்வொரு அற்புதத் தீர்ப்புக்கும் மோசே முக்கியப் பங்கு வகித்தார். மோசே தேவனுக்குக் கீழ்ப்படிந்து தண்ணீரின் மேல் கையை நீட்டியதால் சமுத்திரத்தில் பிளவு ஏற்பட்டது. எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு தேவன் இஸ்ரவேலரை வழிநடத்தியபோது மோசே இஸ்ரவேலின் தலைவனாகப் பணியாற்றினார். தேவன் மோசேயின் மூலம் இஸ்ரவேலருடன் உடன்படிக்கை செய்தார். மோசே நியாயப்பிரமாணக் கற்பலகைகளையும் உடன்படிக்கைப் புத்தகத்தையும் தேவனின் சார்பாக வழங்கினார். தேவன் மோசேக்கு ஆசரிப்புக் கூடாரத்திற்கான கட்டளைகளைக் கொடுத்தார். சீனாய் மலையின் அடிவாரத்தில் இஸ்ரவேலின் விக்கிரகவழிபாட்டின் நெருக்கடியின் போது மோசே தேவனுக்கு சேவை செய்தார். மேலும் ஆசரிப்புக் கூடாரத்தை மோசே நிர்மாணித்தார்.

இரண்டாவதாக, யாத்திராகமப் புத்தகம் இஸ்ரவேலின் மீது மோசேயின் அதிகாரத்தை மீண்டும் மீண்டும் கோடிட்டுக் காட்டுகிறது. மோசேயின் தலைமைத்துவத்தைக் குறித்து இஸ்ரவேலர்கள் கேள்வி எழுப்பினர் என்ற உண்மையை இப்புத்தகம் யாத்திராகமம் 2:14; 5:21; 15:24; 16:2 & 3; மற்றும் 17:2 போன்ற வேதபகுதிகளில் கையாள்கிறது. ஆனால் மற்ற நேரங்களில், யாத்திராகமம் 4:31; 14:31; மற்றும் 20:19 போன்ற பகுதிகளில் மோசேயின் தலைமையை இஸ்ரவேலர்கள் ஒப்புக்கொண்டனர். மேலும், யாத்திராகமம் 6:1-8 மற்றும் 10-13; 24:2; மற்றும் 34:1-4 போன்ற வேத பகுதிகளில் மோசேயை இஸ்ரவேலின் அதிகாரமிக்க தலைவராக தேவனே நியமித்ததாகத் தேவனின் உறுதிமொழியைப் பற்றி வாசிக்கிறோம். ஒரே ஒரு எடுத்துக்காட்டாக, யாத்திராகமம் 19:9 ஐப் பாருங்கள். அங்கு தேவன் சீனாய் மலையில் மோசேக்குத் தாம் வெளிப்படப்போகும் விதத்தை அல்லது தெய்வீகத் தோற்றத்தை விளக்கினார்:

> நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார். (யாத்திராகமம் 19:9).

இந்த வேதபகுதி குறிப்பிடுவது போல, தேவன் சீனாய் மலையில் ஒர் ”அடர்ந்த மேகத்தில்” தோன்றினார். இதனால் இஸ்ரவேல் மக்கள் மோசேயுடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் பேசுவதைக் கேட்கும்போது அவர்கள் ”எப்போதும் தங்கள் நம்பிக்கையை [மோசே மீது] வைப்பார்கள்.” நாம் இங்கு பார்க்கிறபடி, இந்த வசனம் யாத்திராகமம் எழுதப்பட்டதற்கான மிக முக்கியமான காரணத்திற்கு நம் கவனத்தை ஈர்க்கிறது. யாத்திராகமப் புத்தகம் இஸ்ரவேலின் மீது மோசேயின் உறுதியான அதிகாரத்தை உறுதி செய்தது.

> சுவிசேஷ சபையார் யாத்திராகமம் போன்ற ஒரு புத்தகத்தைக் கையாளும் போதோ அல்லது வேறு எந்த புத்தகத்தைக் கையாளும் போதோ, அவர்கள் அனைவரும் இயற்கையாகவே தேவனை மையப்படுத்தும்படியான (theocentric) போக்கைக் கொண்டிருப்பார்கள். இதன் மூலம் எல்லாவற்றையும் தேவனை மையமாகக் கொண்டு, ஒவ்வொரு புத்தகமும் அதன் ஒவ்வொரு அம்சமும் தேவனைப் பற்றியே இருக்கும் என்று கூறுகிறேன். ஆனால் உண்மையில், நீங்கள் யாத்திராகமப் புத்தகத்தைப் பார்க்கும்போது, அந்த அபிப்ராயம் உங்களுக்கு வருவதில்லை. தேவனே பிரதானம், மற்றும் பல விதங்களில், தேவன் முக்கிய கதாபாத்திரமாக இருக்கிறார். குறைந்த பட்சம் அவர் யாத்திராகமப் புத்தகம் பேசும் வரலாற்றை உருவாக்கிக் கட்டுப்படுத்துகிறார் என்ற அர்த்தத்திலாவது அப்படியாகும்; அவர் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவிப்பவர்; கற்பனையை வழங்குபவர்; வாசஸ்தலத்தைக் கொடுப்பவர். ஆனால் அதே நேரத்தில், யாத்திராகமப் புத்தகத்தில் அந்த நிகழ்வுகள் கொடுக்கப்பட்ட இலக்கிய உருவப்படத்தைப் பார்க்கும்போது, நீங்கள் கண்டுபிடிப்பது முதலில் விசித்திரமாகத் தோன்றலாம். ஆனால் தேவன் மோசே மூலம் கிரியை செய்வதைத் தவிர்த்து, முழு யாத்திராகமத்திலும் தாமாக எதையும் செய்வதில்லை என்ற ஒரே விதிவிலக்கைத் தவிர அது உண்மை என்று நான் நினைக்கிறேன். யாத்திராகமப் புத்தகத்தில் மோசேயிடமிருந்து வேறுபட்டு தேவன் வெளிப்படையாகச் செய்யும் ஒரே விஷயம், முதல் அதிகாரத்தில் மருத்துவச்சிகளை தேவன் ஆசீர்வதித்தது மட்டுமே. எனவே, யாத்திராகமப் புத்தகத்தில் நாம் காணும் விஷயம் என்னவென்றால், தேவன் தோன்றி, இஸ்ரவேலுக்காகக் காரியங்களைச் செய்கிறார். ஆனால் மோசே எப்போதும் அங்கு இருக்கிறார், ஏனென்றால் தேவன் அதைச் செய்யும் கருவி மோசேயே. இதற்குக் காரணம், மோசேயும் அவருடைய வாழ்க்கையும் முடியும் தருவாய்க்கு வந்துவிட்டதால், மோசே இஸ்ரேலை விட்டு வெளியேறவிருந்தார், ஆனால் தேவன்

> இஸ்ரவேலை விட்டு வெளியேறப் போவதில்லை. எனவே யதார்த்தம் என்று நீங்கள் யாத்திராகமப் புத்தகத்தைப் படிக்கும்போது, எதிர்கொள்வது என்னவென்றால், மோசே இஸ்ரவேலை விட்டு வெளியேறப் போகிறார் என்ற உண்மையைக் கூறும் மோவாபின் சமவெளிகளில் முடிக்கப்படும் புத்தகம். அதன் விளைவாக, யாத்திராகமப் புத்தகத்தைப் பார்க்கும்போது, இஸ்ரவேல் மக்கள் இது போன்ற கேள்விகளைக் கேட்கிறார்கள்: யார் நம்மை வழிநடத்த வேண்டும்? அவர்கள் எப்படி வழிநடத்த வேண்டும்? அவர்களுக்கு என்ன முன்னுரிமைகள் இருக்க வேண்டும்? மோசே நம்மை விட்டுப் பிரிந்து செல்லவிருக்கும் நம் நாட்களில் நாம் எப்படிப்பட்ட அதிகாரத்தைப் பின்பற்ற வேண்டும்? யாத்திராகமப் புத்தகம் அத்தகைய கேள்விகளுக்கு பதிலளிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. உண்மை என்னவென்றால், தேவன் இஸ்ரவேலை எகிப்திலிருந்து விடுவித்தார், ஆனால் அவர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து மோசேயின் மூலம் விடுவித்தார். ஆம், தேவன் இஸ்ரவேலுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார், ஆனால் தேவன் மோசேயின் மூலமாக நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். ஆம், தேவன் பரிசுத்த யுத்த கூடாரமாகிய வாசஸ்தலத்தைக் கொடுத்தார். ஆனால் அவர் அதை மோசே மூலமே செய்தார். அதுதான் யாத்திராகமப் புத்தகத்தின் முக்கியத்துவமாகும். எனவே, யாத்திராகமப் புத்தகம் இரண்டாம் தலைமுறைக்கு மோசேயின் அதிகாரத்தை உறுதிப்படுத்தி, முதல் தலைமுறையில் என்ன நடந்தது என்றும் மோசே எவ்வாறு ஜனங்களுக்கு முன்னால் தேவனால் உயர்த்தப்பட்டார் என்றும் அந்த உயர்வு காரணமாக, மோசே மரித்துப்போக வேண்டியிருந்தாலும் இரண்டாவது தலைமுறைக்கு முன்பாக மோசே உயர்த்தப்பட வேண்டும் என்கிற கதைகளைச் சொல்கிறது.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

யாத்திராகமத்தின் ஆசிரியத்துவம், சந்தர்ப்பம் மற்றும் உண்மையான அர்த்தம் தொடர்பான சில ஆரம்பக் கருத்துகளை இப்போது நாம் தொட்டிருக்கும் பட்சத்தில், அதன் நவீனப் பயன்பாடு குறித்துச் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டும். இன்று கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு இந்தப் புத்தகம் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும்?

# நவீன காலப் பிரயோகம்

யாத்திராகமம் போன்ற சிக்கலான புத்தகத்தை எண்ணற்ற வழிகளில் நவீன வாழ்க்கைக்குப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு நபரும் தனித்துவமானவர்கள் மற்றும் வெவ்வேறு சூழ்நிலைகளை எதிர்கொள்பவர்கள் என்பதால் இதை நாம் அறிவோம். மேலும் இந்தப் பாடத்தில் நவீனப் பயன்பாட்டை மிகவும் கவனமாகப் பின்னர் பார்ப்போம். ஆனால் இந்தக் கட்டத்தில், நாம் இன்று நம் வாழ்வுக்கு யாத்திராகமத்தைப் பயன்படுத்தும்போது நாம் எப்போதும் மனதில் கொள்ள வேண்டிய சில பொதுவான கண்ணோட்டங்களைக் கவனிக்க இது உதவும்.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாம், யாத்திராகமம் தேவனுடைய வார்த்தையானபடியால் நமக்குப் பொருந்தும் என்பதை அறிவோம். ஆனால் நமக்கும் ஆதி வாசகர்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. இந்தக் காரணத்திற்காக, நாம் எப்பொழுதும் நமது நவீன பயன்பாட்டில் நம்மை வழிநடத்தும்படி புதிய ஏற்பாட்டின் பக்கம் திரும்ப வேண்டும். புதிய ஏற்பாடு யாத்திராகமத்தைச் சுமார் 240 முறை சுட்டிக்காட்டுவது அல்லது குறிப்பிடுவதன் மூலம் நமக்கு வழிகாட்டுதலை வழங்குகிறது. ஆனால் குறிப்பாக புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதி உதவியாக உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய 1 கொரிந்தியர் 10:1-5 ஐக் கவனியுங்கள்:

> நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள் எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே. அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள் (1 கொரிந்தியர் 10:1-5).

நாம் இங்கு பார்க்கிறபடி, யாத்திராகமப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள பல சம்பவங்களை பவுல் குறிப்பிடுகிறார். ஆனால் இப்போது 1 கொரிந்தியர் 10:11 இல் இந்த வேதபகுதி தொடர்வதைப் பாருங்கள்:

> இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது (1 கொரிந்தியர் 10:11).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மொத்தமாக இந்த வசனங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு யாத்திராகமப் புத்தகத்தின் பொருத்தத்தை வெளிப்படையாக உறுதிப்படுத்துகின்றன. பவுல் சொன்னது போல், “இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது.” மேலும் அவை ”நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.” இங்கு சொல்லப்படும் பவுலின் வார்த்தைகள், ”அந்த உலகம்” பற்றி மட்டுமல்ல, ”அவர்களுடைய உலகம்” மட்டுமல்ல, ”நம் உலகம்” என்பதற்காகவும் யாத்திராகமம் எழுதப்பட்டது என்பதைக் காண உதவுகிறது. இந்தப் பாடத்தின் அடிப்படையில் சொல்வதானால், யாத்திராகமப் புத்தகம் அதன் ஆதி வாசகர்களை வழிநடத்தும் வகையில் மட்டும் வடிவமைக்கப்படவில்லை. இது ”நமக்காக” அதாவது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் உலகத்தை அப்போஸ்தலர் எவ்வாறு விவரித்தார் என்பதைக் கவனியுங்கள். நாம் ”யுகங்களின் உச்சம் வந்தது நம்மேல்” தான். ”உச்சநிலை” என்ற வார்த்தை கிரேக்க வார்த்தையான *τέλος (டெலோஸ்)* லிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது அடிக்கடி ”முடிவு” அல்லது ”குறிக்கோள்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வரலாற்றில் தேவனின் திட்டம் அதன் முடிவை அல்லது கிறிஸ்துவில் அதன் இலக்கை அடையும் நேரத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். பொதுவான இறையியல் அர்த்தத்தில், இயேசுவைப் பின்தொடரும் நாம் வரலாற்றின் ”முடிவில்” அல்லது ”கடைசி” யுகத்தில் வாழ்கிறோம்.

பவுலின் மனதில் என்ன இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள, கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் நாம் வரும் போது, பயணத்தின் ஒரு பகுதியாக ஆகிறோம் என்பதை நாம் உணர வேண்டும். எகிப்தின் அடிமைத்தனம் மற்றும் கொடுங்கோன்மையிலிருந்து தேவனுடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு சுதந்திரம் மற்றும் ஆசீர்வாதங்களுக்கு நேராக மோசே மற்றும் இஸ்ரவேலின் பயணத்தின் ”கடைசி நாட்களில்” நாம் உண்மையில் நுழைகிறோம்.

புதிய ஏற்பாடு முழுவதுமாக இறுதிக்காலம் அல்லது கிறிஸ்துவின் கடைசி நாட்கள் மூன்று முக்கிய நிலைகளில் வெளிப்படுகிறது என்று கற்பிக்கிறது. எனவே, ஒரு வேதாகமக் கண்ணோட்டத்தில், மோசே மற்றும் இஸ்ரவேலர்களின் பயணத்தின் இந்த இறுதிக் கட்டம், கிறிஸ்து தனது பூமிக்குரிய ஊழியத்தின் போது தனது ராஜ்யத்தை துவக்கியதில் தொடங்கியது. சபை வரலாறு முழுவதும் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடர்ச்சியில் நாம் அவருடன் ஐக்கியமாக வாழ்கிற நேரத்தில் யாத்திராகமப் புத்தகத்தில் மோசே மற்றும் இஸ்ரவேலர்களின் பயணம் இந்தக் கடைசி நாட்களில் முன்னோக்கி நகர்கிறது. இறுதியாக, மோசேயும் இஸ்ரவேலரும் எகிப்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குப் பயணித்ததைப் போலவே, கிறிஸ்துவில் நம் பயணத்தின் கடைசி நாட்கள் அவருடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இராஜ்ஜியத்தின் நிறைவோடு முடிவடையும். மேலும் அவருடைய மகிமையான வருகையின் போது, நாம் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் பிரவேசிப்போம்.

ஆகவே,1 கொரிந்தியர் 10 குறிப்பிடுகிறபடி, யாத்திராகமத்திலுள்ள ஒவ்வொரு கருப்பொருளையும், கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் துவக்கம், தொடர்ச்சி மற்றும் கடைசி நாட்களில் வரும் உச்சக்கட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் நவீன கிறிஸ்தவர்களுக்கு பிரயோகித்துப் பார்க்க வேண்டும்.

இத்தகைய தொடர்புகளை நாம் பல வழிகளில் உண்டாக்கலாம். உதாரணமாக, இஸ்ரவேலர்கள் சீனாய் மலையில் மோசேயின் மூலமாக தேவனுடனுடனான உடன்படிக்கைக்குள் பிரவேசித்தார்கள் என்று யாத்திராகமம் கூறுகிறது. அதுபோல, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிய உடன்படிக்கைக்குள்ளாக பிரவேசிக்கிறார்கள். ஆனால், முதலாம் வருகையில் தொடங்கிய இந்த புதிய உடன்படிக்கை இப்போதும் தொடர்கிறது, அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிறைவு பெறும்.

மற்றுமொரு உதாரணமாக, மோசேயின் நாட்களில் ஆசரிப்புக் கூடாரத்தில் தேவனுடைய பிரசன்னம் இருந்ததாக யாத்திராகமம் அறிவிக்கிறது. கிறிஸ்துவுக்குள் தேவ பிரசன்னம் இன்னும் பெரிதான விதத்தில் இருக்கிறது என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. இயேசுவே தம் ராஜ்யத்தின் துவக்கத்தில் நம்மிடையே வாசம் பண்ணின தேவ பிரசன்னமாக இருந்தார். இப்போது தொடரும் அவருடைய ராஜ்யத்தில், பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட விசுவாசிகளுக் குள்ளும்,கூட்டாக சபைக்குள்ளும் வாசம் பண்ணுகிறார். சரித்திரத்தின் நிறைவில், புதிய சிருஷ்டி முழுவதும் தேவனுடைய பரிசுத்த வாசஸ்தலமாகும்போது, தேவனுடைய மகிமை சகலத்தையும் நிரப்பும்.

மோசேயின் காலத்தில் தேவன் தம் எதிரிகளை முறியடித்ததையும் யாத்திராகமம் வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து பாவத்தையும், மரணத்தையும் முறியடித்தார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. கிறிஸ்து தம் முதலாம் வருகையில் தேவனுடைய பராக்கிரமசாலியாக தம் வெற்றியின் இறுதிப் படிகளைத் தொடங்கினார். இப்போது சபை ஆவிக்குரிய யுத்தத்தில் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொண்டு கிறிஸ்துவின் சேனையாக அவரைப் பின்பற்றுகிறது. கிறிஸ்து மீண்டும் மகிமையில் வரும்போது, தேவனுடைய எதிரிகளுக்கு விரோதமான தம்முடைய மாபெரும் வானமண்டல யுத்தத்தை நிறைவு செய்வார்.

அதோடு யாத்திராகமத்தில், இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்த தேசத்தில் தேவனுடைய சுதந்தரத்தை சுதந்தரித்துக் கொள்ள முன்னேறிச் சென்றார்கள். தேவனுடைய ஆளுகையை பூமி முழுவதும் பரப்புவதற்காக அவர்கள் எடுத்து வைத்த முதல் படி இதுவே. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. கிறிஸ்துவே தம் ராஜ்யத்தின் துவக்கத்தில் தம்முடைய சுதந்தரத்தைக் காத்து வைத்திருக்கிறார். இன்றும் கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆவியானவருக்குள் அந்த சுதந்தரத்தின் முன்தொகையை அனுபவித்து மகிழ்கிறோம். கிறிஸ்து மீண்டும் வரும்போது, அவரும், அவருக்குள் நாமும் சகலத்தையும் சுதந்தரித்துக் கொள்வோம்.

இவையும், மற்றும் பல பெரிய தொடர்புகளும், யாத்திராகமம் முதன்மையாக கவனம் செலுத்திய மோசேயின் நிலையான அதிகாரம் கிறிஸ்துவுக்குள் நமக்கும் பொருந்தும் என்பதை தெளிவுபடுத்துகின்றன. சுருக்கமாகச் சொன்னால், தன் ஆதி வாசகர்கள் தங்கள் காலத்தில் தேவன் செய்தவைகளின் அடிப்படையில் மோசேயின் அதிகாரத்திற்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி யாத்திராகமம் அழைப்பு விடுத்தது. மற்றும், தேவன் நிறைவேற்றியவை, நிறைவேற்றிக் கொண்டிருப்பவை, மற்றும் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்ற இருப்பவை ஆகியவற்றின் அடிப்படையில் மோசேயின் அதிகாரத்திற்கு நாமும் உண்மையுள்ள வர்களாக இருக்க வேண்டும் என்று யாத்திராகமம் நமக்கும் அழைப்பு விடுக்கிறது.

யாத்திராகமப் புத்தகத்தின் முதல்நிலை கருத்துக்களை மேலோட்டமாகப் பார்த்த நாம், புத்தகத்தின் அமைப்பு மற்றும் பொருளடக்கம் என்னும் இப்பாடத்தின் இரண்டாம் முக்கியத் தலைப்புக்குத் திரும்புவோம்.

# அமைப்பும் பொருளடக்கமும்

நாற்பது அதிகாரங்களைக் கொண்ட யாத்திராகமப் புத்தகத்தில், பல விதமான கதாபாத்திரங்களும், சூழல்களும், சம்பவங்களும் நிறைந்துள்ளன. வர்ணனைகள், பாடல், வம்சவரலாறு, பட்டியல், நியாயப்பிரமாணங்கள், உரைகள், ஜெபங்கள், மற்றும் அறிவுறுத்தல்கள் என பலதிறப்பட்ட இலக்கிய வடிவங்களையும் அதில் காணலாம். இக்கடின நடைகளால் சிலசமயம் இப்புத்தகத்தின் முக்கியப் பிரிவுகள், பகுதிகள், மற்றும் சிறு பகுதிகளுக்கிடையே இருக்கும் வேறுபாடுகளைக் காண்பது கடினமாகிறது. ஆகவே, யாத்திராகமத்தை பல விதங்களில் திட்டவரையிடலாம் என்று சொல்லலாம். ஆனால், புத்தகத்தின் ஆதி நோக்கத்தை நினைவில் கொள்ளும்போது, அதன் அடிப்படை அமைப்பையும், பொருளடக்கத்தையும் விளங்கிக் கொள்வது கடினமாக இருக்காது.

யாத்திராகமப் புத்தகம் இரண்டு முக்கிய பிரிவுகளைக் கொண்டது. 1:1-18:27-லுள்ள முதல் பிரிவு மோசேயும், இஸ்ரவேலரும் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டதில் கவனம் செலுத்துகிறது. 19:1-40:38-லுள்ள இரண்டாம் பிரிவு, சீனாய் மலையில் மோசேயும் இஸ்ரவேலரும் கானானுக்குள் பிரவேசிக்க ஆயத்தமானதைப் பற்றியது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இவ்விரு முக்கியப் பிரிவுகளும் எவ்வாறு யாத்திராகமத்தின் இரண்டாம் தலைமுறையின் மீதான மோசேயின் நிலையான அதிகாரத்தில் கவனம் செலுத்துகின்றன என்று குறிப்பாகப் பார்க்கவிருக்கிறோம். மோசேயும், இஸ்ரவேலரும் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டு சீனாய் மலைக்குச் சென்றதைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## எகிப்திலிருந்து விடுதலை (யாத்திராகமம் 1:1-18:27)

இஸ்ரவேலர் விடுவிக்கப்படுவதற்கு முன்னிருந்த மோசேயின் அதிகாரத்தில் கவனம் செலுத்துவதிலிருந்து மோசேயும் இஸ்ரவேலரும் எகிப்திலிருந்து விடுவிக்கப்படுதல் தொடங்குகிறது. இதனை யாத்திராகமம் 1:1-4:31 இல் காணலாம். அதன் பின்னர், 5:1-18:27 இல், மோசே இஸ்ரவேலர் விடுவிக்கப்பட்டபோது நடந்த சம்பவங்களை மையமாகக் கொள்கிறார். இஸ்ரவேலரின் விடுதலைக்கு முன்னான சம்பவங்களைக் குறித்து யாத்திராகமம் என்ன சொல்கிறது என்று முதலில் பார்ப்போம்.

### விடுதலைக்கு முன் (1:1-4:31)

இஸ்ரவேலரின் விடுதலைக்கு முன்னான சம்பவங்களை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது, 1:1 இல் தொடங்கும் மோசேயின் பிறப்பு மற்றும் வளர்ப்பு 2:10 வரைச் செல்கிறது. அதைத் தொடர்ந்து, இஸ்ரவேலின் மேல் மோசே தலைவராக உயர்ந்ததை 2:11-4:31 இல் காண்கிறோம். மோசேயின் பிறப்பு மற்றும் வளர்ப்பைப் பற்றி முதலில் பார்ப்போம்.

**பிறப்பும் வளர்ப்பும் (1:1–2:10).** மோசே தன் இளம் பருவத்தை எகிப்தின் அரண்மனையில் செலவிட்டார் என்பதால், மோசேயின் அதிகாரத்தைக் குறித்து எழுந்திருக்கக் கூடிய ஆட்சேபங்களைத் தவிர்க்கும் விதத்தில் இவ்வசனங்கள் அமைந்திருக்கின்றன. கதை தொடங்கும்போது, இஸ்ரவேலர் அதிகமாகப் பெருகியதால் அவர்கள் தனக்கு விரோதமாக கலகம் செய்வார்களோ என்று பார்வோன் பயந்தான். அதனால், அவன் இஸ்ரவேலரின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த சூட்சுமமான மூன்று திட்டங்களை வகுத்தான். ஆனால், அவன் அவர்கள் மீது சுமத்திய கடினமான வேலைகள் தோல்வியில் முடிந்தன. இஸ்ரவேலரின் ஆண்பிள்ளைகளை பிறக்கும்போதே கொன்று போடும்படி மருத்துவச்சிகளுக்கு அவன் கொடுத்திருந்த கட்டளையும் தோல்வியில் முடிந்தது. இவையனைத்திலும் முக்கியமாக, இஸ்ரவேலரின் ஆண்பிள்ளைகளை நைல் நதியில் போட்டுவிட வேண்டும் என்னும் கட்டளையும் தோல்வியிலேயே முடிந்தது.

இந்தப் பகுதிகள் முழுவதும் வேடிக்கையான முரண்பாடுகளே காணப்படுகின்றன. ஆனால், பார்வோனின் சொந்த குமாரத்தியே நைல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நதியிலிருந்து மோசேயை மீட்டதன் மூலம் பார்வோனின் கடைசித் திட்டம் தோற்றுப் போனதுதான் மிகப்பெரிய முரண்பாடாயிற்று. 2:10 இல், பார்வோனின் குமாரத்தி, “அவனை ஜலத்திலிருந்து எடுத்தேன்” என்று சொல்லி அவருக்கு மோசே என்ற பெயரை வைத்தாள். எகிப்திய மொழியில் “மோசே” என்பதற்கு “குமாரன்” என்று அர்த்தம், இது மோசே ராஜரீக அரண்மனையின் அங்கத்தினர் என்பதை பெரும்பாலானோருக்குத் தெரிவித்தது. ஆனால், பார்வோனின் குமாரத்தியோ, மோசே என்னும் பெயர் “வெளியில் எடுக்க” என்னும் அர்த்தத்தில் அமைந்த எபிரெய வினைச்சொல்லான *מָשָׁה*(*மாஷா*) என்பதைப் போல இருந்ததால், தான் அந்தப் பெயரைத் தெரிவு செய்ததாக தெளிவாக விளக்கினாள். ஆகவே, உண்மையுள்ள இஸ்ரவேலரின் காதுகளில் மோசேயின் பெயர் அவர் பார்வோனின் குமாரன் என்று உணர்த்தவில்லை. மாறாக, மோசே என்னும் பெயர், பார்வோன் தங்களுக்குத் தீமை செய்ய எடுத்த முயற்சிகள் எப்படித் தோல்வியில் முடிந்தன என்பதை இஸ்ரவேலருக்கு நினைவுறுத்துவதாக இருந்தது.

**தலைமைத்துவத்திற்கு உயர்தல் (2:11–4:31).** இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன் நடந்த சம்பவங்களைப் பற்றிய விபரம் பின்னர் மோசேயின் பிறப்பு மற்றும் வளர்ப்பிலிருந்து, 2:11-4:31 இல் மோசே இஸ்ரவேலரின் மீது தலைவராக உயர்ந்ததைப் பற்றிய சந்தேகங்களின் பக்கம் திரும்புகிறது.

யாத்திராகமம் 2:14 இல், இஸ்ரவேலரைச் சேர்ந்த ஒரு அடிமை மோசேயிடம், “எங்கள்மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்?” என்று கேட்டான். மோசே எவ்வாறு இஸ்ரவேலின் அதிகாரபூர்வமான தலைவரானார் என்பதை விளக்கும் இப்பகுதியில் இதற்கான பதிலைக் காணலாம். இஸ்ரவேலனின் அந்தக் கேள்விக்கான பதில் ஆறு-படி முரண்தொடை அணிநயம் கொண்ட ஒரு இலக்கிய அமைப்பில் வருகிறது. இந்த நடையில், முதலில் வரும் பகுதிகள் இறுதியில் வரும் பகுதிகளுக்கு இணையாக அமைந்து ஒன்றையொன்று சமநிலைப்படுத்துகின்றன.

முதலாவதாக, யாத்திராகமம் 2:11-15 இல் மோசே எகிப்திலிருந்து ஓடிப் போனதைப் பற்றிய குறிப்பு, அவர் இஸ்ரவேல் அடிமை ஒருவனைக் காப்பாற்ற ஒரு எகிப்தியனைக் கொன்றதால் எகிப்திலிருந்து ஓடிப் போனார் என்பதை விளக்குவதன் மூலம் மோசேயை இஸ்ரவேலின் தலைவராக நியாயப்படுத்துகிறது.

இரண்டாவதாக, 2:16-22 இல், மோசே ஒரு மீதியானிய குடும்பத்தினருடன் இணைகிறார். மோசேயினுடைய குமாரனின் பெயர் “கெர்சோம்” என்று 22 ஆம் வசனம் குறிப்பிடுகிறது. இந்தப் பெயரை இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பார்த்தால், அது “இங்கு ஒரு பரதேசி” என்னும் அர்த்தம் கொண்ட எபிரெய பதமான *גֵּר שָׁם*(*கெர் ஷாம்*) என்பதைக் குறிக்கிறது. இது, மோசே மீதியானியருக்கு மத்தியில் ஒரு பரதேசியாகத் தங்கியிருப்பதாக உணர்ந்ததை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குறிக்கிறது. அதாவது, அவர் இஸ்ரவேலன் என்னும் தன் உண்மையான அடையாளத்தை ஒருபோதும் மறந்து விடவில்லை.

மூன்றாம் பகுதியான யாத்திராகமம் 2:23-25 தேவன் தம் உடன்படிக்கையை நினைவுகூர்ந்ததைக் குறிப்பிடுகிறது. இப்பகுதியில், இஸ்ரவேலர்கள் உதவி கேட்டுக் கூக்குரலிட்டார்கள், தேவன் இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்குத் தாம் கொடுத்த வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்து அவர்களுடைய கூக்குரலைக் கேட்டார்.

நான்காம் பகுதி முந்தைய பகுதியுடன் தொடர்புடையது. 3:1-4:17 வசனங்கள் எரியும் முட்செடியிலிருந்து தேவன் மோசேக்கு கட்டளையிட்டதைப் பற்றிக் கூறுகின்றன. இங்கு, இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வாக்குத்தத்த தேசத்திற்கு அழைத்துச் செல்ல மோசேயை அழைத்ததன் மூலம் தேவன் இஸ்ரவேலின் முற்பிதாக்களுடன் செய்து கொண்ட தம் உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் என்னும் உண்மையால் மோசேயின் தலைமைத்துவம் நியாயப்படுத்தப்படுகிறது.

யாத்திராகமம் 4:18-26 லுள்ள ஐந்தாம் பகுதி மோசே தன் மீதியானிய குடும்பத்துடன் இருந்த காலத்தைப் பற்றிய இரண்டாம் பகுதியுடன் தொடர்புடையது. இப்பகுதி, மோசே தன் மீதியானிய குடும்பத்திலிருந்து புறப்பட்டதை விவரிக்கிறது. மோசே கெர்சோமுக்கு விருத்தசேதனம் செய்யத் தவறியதால், இப்பகுதி மீண்டும் கெர்சோம் மீது கவனம் செலுத்துகிறது. இப்பகுதியில், தேவன் ஆதியாகமம் 17:10-14 இல் ஆபிரகாமுடன் செய்த தம் உடன்படிக்கையின்படி மோசேயைக் கொலை செய்துவிடுவதாக அச்சுறுத்தினார் என்று பார்க்கிறோம். ஆனால், இந்தச் சம்பவமும் மோசேயின் தலைமைத்துவத்தை தேவன் ஆதரித்ததையே காண்பித்தது. மோசேயின் மீதியானிய மனைவியாகிய சிப்போராள் கெர்சோமுக்கு விருத்தசேதனம் செய்தபடியால் தேவன் அவர்களுக்கு இரங்கினார் என்பதிலிருந்து இதனை அறியலாம்.

இறுதியாக, துவக்கத்தில் மோசே எகிப்திலிருந்து ஓடியதை சமநிலைப்படுத்துவதான மோசே ஆரோனுடன் எகிப்திற்குத் திரும்பிய சம்பவம் யாத்திராகமம் 4:27-31 இல் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கும், மோசே தலைமைத்துவத்திற்கு உயர்ந்தது நியாயப்படுத்தப்படுகிறது. 4:31 இல், தேவன் மோசேயைத் தங்களிடம் அனுப்பியதால், இஸ்ரவேலர் தேவனை விசுவாசித்து அவரைத் தொழுது கொண்டார்கள் என்று அறிகிறோம்.

> நாமெல்லோரும், யாராயிருந்தாலும், கதை சொல்லும்போது அதற்கு ஒரு துவக்கமும், முடிவும், முன்னேற்றமும், திருப்புமுனையும், சரிவும் சீராக இருக்கும்... ஆகவே, வேதாகம சம்பவங்களிலும் இத்தகைய சமச்சீரான அமைப்பு இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. உண்மையில், வேதாகமக் கதைகளில் நாம் எதிர்பார்ப்பது இதுதான். வேதாகம



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கதைகூறுபவர்கள், மற்றும் வேதாகம வர்ணனையாளர்கள் தாங்களாகவே ஒன்றைப் புனைந்து சொல்வதில்லை. தாங்கள் சொல்வது கலைநயத்துடன் இருக்க வேண்டும் என்பதற்கான உண்மையான விபரங்களைத் திரித்துக் கூறுவதும் இல்லை; அனைத்துமே நாம் கதை சொல்லும் விதத்திலும், நாம் அதைப் புரிந்து கொள்ளும் விதத்திலுமே சொல்லப்பட்டிருக்கின்றன. எப்படி ஒரு விபரம் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய முற்படும்போது அதில் எதை கவனிக்க வேண்டும், எதைத் தேடிப் பார்க்க வேண்டும் என்பதற்கான ஒரு கருவி நமக்குக் கிடைக்கிறது.
>
> – Dr. கோர்டான் எச். ஜான்ஸ்டன்

இஸ்ரவேலரின் விடுதலைக்கு முன்பிருந்த காலக்கட்டத்தில் மோசேயைப் பற்றியும், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையான விபரங்களையும் பார்த்த நாம், இஸ்ரவேலரின் விடுதலையின்போது மோசேயின் செயல்பாடுகளைப் பற்றி யாத்திராகமம் 5:1-18:27 இல் காணவிருக்கிறோம்.

## விடுதலையின்போது (5:1-18:27)

இஸ்ரவேலரின் விடுதலையின்போது மோசேயின் செயல்பாடுகள் எகிப்தில் அவரிருந்த காலத்தில் தொடங்கியது, இதனை நாம் யாத்திராகமம் 5:1-13:16 இல் காணலாம். இதைத் தொடர்ந்து, யாத்திராகமம் 13:17-18:27 இல், எகிப்து முதல் சீனாய் மலை வரை அவர்களின் பிரயாணத்தில் மோசேயின் தலைமைத்துவத்தைப் பற்றி அறிகிறோம். மோசே எகிப்தில் இருந்த காலத்தைப் பற்றிப் பார்ப்போம்.

**எகிப்தில் (5:1–13:16).** மோசே எகிப்தில் இருந்த காலம், மோசே ஆரம்பத்தில் எடுத்த முயற்சிகள் எதிர்பாராத விதமாக இஸ்ரவேலரின் துன்பத்திற்குக் காரணமாகிவிட்டதால் அவருக்கு எதிராக எழும்பியிருக்கக் கூடிய ஆட்சேபங்களுக்கு பதிலளிப்பதாக உள்ளது.

5:1-6:27 இல், இஸ்ரவேலர் மோசேயை நிராகரித்தது, மோசேயின் புலம்பல், மற்றும் தேவன் மீண்டும் கொடுத்த உறுதிப்பாடு ஆகியவற்றைக் கொண்ட இரு இணையான பகுதிகளை வாசிக்கிறோம். முதல் பகுதி 5:1-6:8 இல் வருகிறது. பார்வோனைத் தங்களுக்கு எதிராக கோபப்படும்படி செய்ததால், இஸ்ரவேலர் மோசேயை நிராகரித்தனர். அதற்காக மோசே தாழ்மையுடன் புலம்பினார். அதன் பின்னர், தேவன் இஸ்ரவேலரை வழிநடத்துவதற்கான அவருடைய அழைப்பை அவருக்கு உறுதி செய்தார்.

6:9-27 இல் உள்ள இரண்டாம் பகுதி இதே முறையைப் பின்பற்றி வருகிறது. ஆனால், மோசே இரண்டாம் முறை நிராகரிக்கப்பட்டதையும், அவருடைய புலம்பலையும் தொடர்ந்து, மீண்டும் தேவன் உறுதி செய்வது ஒரு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வம்சவரலாற்றின் வடிவில் வருகிறது. 6:1-27 வசனங்கள் மோசே மற்றும் ஆரோனின் வம்சாவழியை அவர்களுடைய முற்பிதாவான லேவி முதல் ஆரோனின் பேரனாகிய பினெகாஸ் வரை பட்டியலிடுகின்றன. லேவி இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களில் ஒருவர் ஆவார். எண்ணாகமம் 25 மற்றும் 31 இன்படி, இரண்டாம் தலைமுறையில், இஸ்ரவேலர் உண்மையுடன் தேவனை சேவிக்கும்படி பினெகாஸ் வழிநடத்தி வந்தார். இங்கு, மோசேயும், ஆரோனும் யாக்கோபின் கோத்திரங்களிலிருந்து வந்த உண்மையான இஸ்ரவேலர்கள் என்பதை தேவன் இரண்டாம் தலைமுறையினருக்கு உறுதிப்படுத்தினார். பினெகாஸைப் பார்க்கும்போது அவருக்குள் மோசே மற்றும் ஆரோனின் விசுவாசப் பாரம்பரியத்தை நேரடியாகக் காண முடிந்தது, அதோடு இவர்கள் அனைவரும் தங்களை வழிநடத்த தேவனால் அழைக்கப்பட்டவர்கள் என்ற உறுதியும் கிடைத்தது.

இது, நம்மை எகிப்தில் மோசேயின் செயல்பாடுகளைப் பற்றிய இரண்டாம் முக்கியப் பகுதிக்கு அழைத்துச் செல்கிறது: அது யாத்திராகமம் 6:28-13:16 இல் விவரிக்கப்பட்டுள்ள எகிப்தின் மீதான தேவனுடைய அற்புதமான நியாயத்தீர்ப்பு என்பதாகும். இந்த அதிகாரங்கள், எகிப்தியருக்கு விரோதமாக தேவன் நிகழ்த்திய இயற்கைக்கு அப்பாற்பட்ட நியாயத்தீர்ப்புகளில் மோசேக்கு இருந்த முக்கியமான பங்கைக் குறிப்பிடுவதன் மூலம் மோசேயின் அதிகாரத்தை நியாயப்படுத்துகின்றன.

பாம்புகளைக் கொண்ட முதல் நியாயத்தீர்ப்பு 6:28-7:13 இல் வருகிறது. ஆரோனின் கோல் அற்புதவிதமாக பாம்பாக மாறி, பார்வோனின் மந்திரவாதிகள் உண்டாக்கிய பாம்புகளை விழுங்கிப் போட்டு, எகிப்தின் மீதான தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தியது. இந்த அறிமுக அற்புதத்திற்குப் பின்னர், யாத்திராகமம் 7:14-10:29 இல் தொடர்ந்து ஒன்பது நியாயத்தீர்ப்புகள் வருகின்றன. இந்த ஒன்பது நியாயத்தீர்ப்புகளும் சீரான மூன்று தொடர்களாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் மோசே நைல் நதியில் பார்வோனை எதிர்கொள்வதில் தொடங்குகின்றன.

முதல் தொடர் 7:14-8:19 இல் உள்ளது. இதில், தண்ணீர் இரத்தமாக மாறுவதும், தவளைகள் தேசத்தை மூடுவதும், புழுதியிலிருந்து பேன்கள் எழும்புவதும் அடங்கும். 8:20-9:12 –லுள்ள இரண்டாம் தொடரில், வண்டுகளின் வாதையும், எகிப்தியரின் கால்நடைகளின் மீதான வாதையும், கொப்புளங்களின் வாதையும் அடங்கும். 9:13-10:29 வரையுள்ள மூன்றாம் தொடரில், கல்மழை, வெட்டுக்கிளிகள் மற்றும் இருளின் நியாயத்தீர்ப்புகள் வருகின்றன. இவ்வற்புதமான நியாயத்தீர்ப்புகள் அனைத்திலும் மோசே வகித்த முக்கிய பங்கு, அவரை இஸ்ரவேலின் தலைவராக நியாயப்படுத்தியது. இறுதியாக, கடைசி நியாயத்தீர்ப்பான பஸ்கா 11:1-13:16 இல் நிறைவடைகிறது. தேவன் எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளைச் சங்காரம் பண்ணிய பிறகு பார்வோன் இஸ்ரவேலரைப் போகவிட்டான்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இஸ்ரவேலரின் விடுதலையின்போது எகிப்தில் நடந்த சம்பவங்களைப் பார்த்த நாம், எகிப்திலிருந்து சீனாய் மலைக்குச் சென்ற பிரயாணத்திலும் மோசேயின் அதிகாரத்தை தேவன் நியாயப்படுத்திய விதங்களைப் பற்றி 13:17-18:27 இல் பார்ப்போம்.

**பிரயாணத்தில் (13:17–18:27).** சீனாய் மலைப் பிரயாணத்தில் இஸ்ரவேலர்கள் சிரமங்களை அனுபவித்திருந்தாலும், அவர்கள் எகிப்தை விட்டுப் புறப்படும்போது இதற்கெல்லாம் ஆயத்தமாகாமல் இல்லை என்பதைக் கவனிப்பது அவசியம். இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்திலிருந்து "அணியணியாய்ப் புறப்பட்டுச் சென்றார்கள்" என்று யாத்திராகமம் 13:18 தெளிவாகக் கூறுகிறது. சேனை என்னும் கருப்பொருளைக் கொண்டு பார்த்தால், இப்பகுதி முழுவதும் மற்ற தேசங்களுடன் இஸ்ரவேலரின் சேனைக்கிருந்த முரண்பாடுகள், அவர்களுக்கு ஏற்பட்ட தண்ணீர் மற்றும் உணவுத் தேவைகளால் நிறைந்துள்ளதைக் காணலாம்.

இஸ்ரவேலர் யுத்தத்திற்குச் செல்வதைப் போல அணியணியாகப் புறப்பட்டது நான்கு முக்கியப் பிரிவுகளாகப் பிரிகிறது. முதல் பிரிவு, 13:17-15:21 இல் மோசேயின் அதிகாரத்தை செங்கடல் அருகே நியாயப்படுத்துகிறது. யாத்திராகமம் 14:31-ல், இஸ்ரவேலர் வெட்டாந்தரையைக் கடப்பது போல செங்கடலைக் கடந்த பின்னர், மோசே இவ்வாறு நியாயப்படுத்தப்படுவதை வாசிக்கிறோம்:

> ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள் (யாத்திராகமம் 14:31).

இவ்வசனம் இப்பிரிவின் முக்கிய குறிப்புகளை மிகத்தெளிவாக வலியுறுத்துகிறது. இஸ்ரவேலின் சேனை "தேவனாகிய கர்த்தருக்கு பயந்து, அவர் மீது நம்பிக்கை வைத்தது." அதோடு, அவர்கள் "அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயின் மீதும்" நம்பிக்கை வைத்தார்கள். இதிலுள்ள செய்தி ஆதி வாசகர்களுக்கு மிகத் தெளிவாக விளங்கியிருக்கக் கூடும். அவர்களும் தங்கள் காலத்தில் தேவனையும், மோசேயையும் நம்ப வேண்டும்.

அதன் பின்னர், 15:22-27 இல் இஸ்ரவேலின் சேனை சூர் வனாந்தரத்திற்கு பிரயாணப்பட்டுச் சென்றது. சூர் வனாந்தரத்தில், மோசே கண்டறிந்த தண்ணீர் குடிக்க முடியாததாக இருந்ததால், ஜனங்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து, அவருடைய அதிகாரத்திற்கு சவால்விட்டனர். ஆகவே, தேவன் ஒரு மரத்துண்டை மோசேக்கு அருளி அதன் மூலம் தண்ணீரை மதுரமாக்கி, அவரை இஸ்ரவேலின் தலைவராக உயர்த்தினார்.

16:1-36 இல் உள்ள மூன்றாம் பிரிவில், இஸ்ரவேலர்கள் சீன் வனாந்தரத்தில் வந்து சேர்கிறார்கள். சீன் வனாந்தரத்தில், இஸ்ரவேலர்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து மீண்டும் மோசேயின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தலைமைத்துவத்திற்கு சவால் விட்டார்கள். ஆனால் இம்முறை, 7 ஆம் வசனத்தில், அவர்கள் உண்மையில் தேவனுக்கு விரோதமாகவே முறுமுறுப்பதாக மோசே குறிப்பிட்டார். தேவன் இஸ்ரவேலருக்கு காடையும், அனுதினமும் மன்னாவும் அருளி போஷித்து, மோசேயைக் காப்பாற்றினார்.

> தேவன் வனாந்தரத்தில் ஜனங்களின் தேவைகளைச் சந்தித்து மோசேயின் அதிகாரத்தை உறுதிப்படுத்தினார். அவர்கள் மோசேக்கும், தேவனுக்கும் விரோதமாக முறுமுறுத்தாலும், தேவன் கிருபையாக அவர்களுக்கு கன்மலையிலிருந்து தண்ணீரையும், வானத்திலிருந்து மன்னாவையும் அருளிச் செய்தார்; இவையனைத்தும் தாம் தகப்பனாக இருந்து அவர்களைப் பராமரிப்பதற்காக மட்டுமல்ல, தாம் அனுப்பிய மோசேயின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காகவுமே செய்தார்… கிறிஸ்தவர்களாகிய நாம் பெரும்பாலும் ஒரு மனிதனை நம்பவோ, அல்லது அவர் மீது விசுவாசம் வைக்கவோ முன்வருவதில்லை. ஆனால் இங்கு, தேவன் மீது மட்டுமல்ல, உண்மையில் இந்த விஷயத்தில் தேவனுடைய கருவியாகவும், தூதுவனாகவும் இருந்த மோசேயின் மீதும் விசுவாசம் வைக்குமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதனை நாம், செங்கடலின் பிற்பகுதியில் செங்கடலைக் கடக்க முயன்ற எகிப்திய இராணுவங்களை தேவன் வல்லமையாக வெற்றி கொண்ட இடத்திலும் பார்க்கலாம். அக்கடலின் அக்கரையில் ஜனங்கள் களிகூர்ந்து தேவனைத் துதித்து, தேவன் மீதும், மோசேயின் மீதும் நம்பிக்கை வைத்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.
>
> – Prof. தாமஸ் எகர்

இஸ்ரவேலர் பிரயாணப்பட்டுச் சென்ற நான்காம் மற்றும் இறுதியான இடம் 17:1-18:27 இல் உள்ளபடி ரெவிதீம் என்பதாகும். இந்த நீண்ட பிரிவு மூன்று பாகங்களாகப் பிரிகிறது. 17:1-7 லுள்ள முதல் பாகத்தில், ஜனங்கள் தண்ணீரைக் குறித்து முறுமுறுத்து தேவனை பரீட்சை பார்த்தார்கள். அதற்கு பதிலாக, தேவன் மூப்பர்களை அழைத்துக் கொண்டு சீனாய் மலைக்கு வருமாறு மோசேயிடம் கூறினார். அங்கு, ஒரு கன்மலையை அடிக்குமாறு தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார், அதிலிருந்து தண்ணீர் வந்தது. இந்த அற்புதத்தைக் கண்ட பின்னரும் இஸ்ரவேலர்கள் தேவனுடன் இன்னும் அதிகமாக வாக்குவாதம் செய்தார்கள். வசனத்தில், “கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா?” என்று தேவனை அவமதிக்கும் விதத்தில் பரீட்சை பார்த்தார்கள். அடுத்த இரண்டு பாகங்களில் சற்று அமைதி நிலவுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த பாகங்கள் எப்படி இக்கேள்விக்கு பதில் கொடுக்கின்றன என்பதை விளங்கிக் கொள்ள, இஸ்ரவேலர் நன்றாக அறிந்திருந்த ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆதியாகமம் 12:3 இல், இஸ்ரவேலை ஆசீர்வதிப்பவர்களை தாம் ஆசீர்வதிப்பதாகவும், அவர்களை சபிப்பவர்களை தாம் சபிப்பதாகவும் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணியிருந்தார். ஆகவே, இந்த வாக்குத்தத்தத்தின்படி, யாத்திராகமம் 17:8-16 இல், அமலேக்கியர்கள் இஸ்ரவேலரை தாக்கியபோது, தேவன் அமலேக்கியர்களைத் தோற்கடித்து, அவர்களைச் சபித்தார்.

அதன் பின்னர் இந்தப் பிரிவின் இறுதி பாகமான 18:1-27 இல், எத்திரோ சமாதானமாக மோசேயிடம் வருகிறார். எத்திரோ இஸ்ரவேலரை ஆசீர்வதித்ததனால் அவர் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார். இவ்விரு சம்பவங்களும், தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணியபடியே இஸ்ரவேலர் மத்தியில் வாசம் பண்ணினார் என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் தெளிவாகிறது. இஸ்ரவேலின் சேனைகள் மோசேயைப் பின்பற்றிச் சென்றபோது, தேவனுடைய வல்லமையான பிரசன்னத்தின் பாதுகாப்பைப் பெற்றார்கள்.

இதுவரை, மோசேயும் இஸ்ரவேலரும் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டு சீனாய் மலைக்குச் சென்றதில் கவனம் செலுத்துவதன் மூலம் எவ்வாறு யாத்திராகமத்தின் அமைப்பும், பொருளடக்கமும் மோசேயின் அதிகாரத்தைப் பற்றிப் பேசுகின்றன என்று பார்த்தோம். இப்போது, யாத்திராகமப் புத்தகத்தின் இரண்டாம் பாகமான 19:1-40:38 வசனங்களுக்குத் திரும்புவோம். இந்த அதிகாரங்கள், மோசேயும் இஸ்ரவேலரும் சீனாய் மலையில் கானானுக்குப் போக ஆயத்தமானதில் கவனம் செலுத்தி மோசேயின் அதிகாரத்தை வெளிப்படுத்துகின்றன.

## கானானுக்கு செல்வதற்கான ஆயத்தம் (யாத்திராகமம் 19:1-40:38)

மோசேயும் இஸ்ரவேலரும் சீனாய் மலையடிவாரத்தில் பாளயமிறங்கி இருந்தபோது என்ன நடந்தது என்பது பெரும்பாலான வேதபாட மாணவர்களுக்கு பரிச்சயமானதே – அது, தேவன் எவ்வாறு தம் நியாயப்பிரமாணத்தையும், தம் ஆசாரிப்புக்கூடாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார் என்பதைப் பற்றியது ஆகும். ஆனால், அங்கு நடந்த ஒருசில விஷயங்களை மட்டுமே யாத்திராகமம் நமக்குக் கூறுகிறது. லேவியராகம புத்தகம் அந்த நேரத்தில் நடந்த மற்றும் பல விஷயங்களைப் பற்றிச் சொல்வதால் இதை நாம் அறிகிறோம். அதனால், இந்த அதிகாரங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க சில காரியங்களே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை இந்த சம்பவங்களைப் பற்றிய குறிப்பிட்ட சில கண்ணோட்டங்களை வலியுறுத்துவதற்காக அமைக்கப்பட்டவை. நாம் பார்க்கவிருக்கிறபடி, இவை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சீனாய் மலையில் தேவன் எவ்வாறு மோசேயின் அதிகாரத்தை வெளிப்படுத்தினார் என்பதில்தான் குறிப்பாக கவனம் செலுத்துகின்றன.

மோசேயும் இஸ்ரவேலரும் கானானுக்குப் போக ஆயத்தமான பகுதி இரண்டு முக்கியப் பிரிவுகளாகப் பிரிகிறது. யாத்திராகமம் 19:1-24:11 வுள்ள முதல் பிரிவு மோசேயின் அதிகாரத்தையும், இஸ்ரவேலின் உடன்படிக்கையையும் பற்றியது. 24:12-40:38 வுள்ள இரண்டாம் பிரிவு மோசேயின் அதிகாரத்தையும், இஸ்ரவேலின் ஆசரிப்புக்கூடாரத்தையும் வலியுறுத்துகிறது. இஸ்ரவேலின் உடன்படிக்கையைப் பற்றி இங்கு பார்ப்போம்.

## இஸ்ரவேலின் உடன்படிக்கை (19:1-24:11)

இஸ்ரவேலின் உடன்படிக்கை பற்றிய பதிவு யாத்திராகமத்தின் ஆதி வாசகர்களுக்கான மிக முக்கியமான ஒரு கேள்விக்கு பதிலளிக்கிறது: யாத்திராகமத்தின் இரண்டாம் தலைமுறையினர் ஏன் சீனாய் மலையில் மோசேயிடமிருந்து தங்கள் முன்னோர்கள் பெற்ற உடன்படிக்கையின் நியமத்திற்கு உடன்பட வேண்டும்? அவர்கள் ஏன் ஒரு வித்தியாசமான பாதையில் செல்லக் கூடாது?

இஸ்ரவேலின் உடன்படிக்கைக்கு என்று ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் இக்கேள்விக்கு நான்கு படிகளில் பதில் கொடுக்கின்றன. முதலாவது, யாத்திராகமம் 19:1 முதல் 8-ஆம் வசனத்தின் முதல் பகுதி வரை தேவனுடனான இஸ்ரவேலின் உடன்படிக்கையின் துவக்கத்தைக் காண்கிறோம்.

**உடன்படிக்கையின் துவக்கம் (19:1-8a).** இவ்வசனங்கள் மோசேயினுடைய உடன்படிக்கையின் அடிப்படை காரியங்களைக் கொடுக்கின்றன. தேவன் இஸ்ரவேலருக்கு தயவு காண்பித்திருந்தார்; அவர்கள் தம்மிடம் பற்றுறுதியுடன் இருக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார்; அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இஸ்ரவேலர் "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" என்று உற்சாகத்துடனும், ஒருமனதுடனும் சொன்னதைக் குறிப்பிட்டு, யாத்திராகமம் 19:8 இந்த பாகத்தை நிறைவு செய்கிறது. இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் காரியம் தெளிவானதே; இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த வாசகர்கள் தங்கள் முன்னோர்களை பின்பற்ற வேண்டும். அவர்களும் அதே உற்சாகத்துடன் மோசே மூலம் கொடுக்கப்பட்ட தேவனுடைய உடன்படிக்கைக்கு மீண்டும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

**மோசேயின் மீதான இஸ்ரவேலரின் நம்பிக்கை (19:8b–20:20).** மோசேயின் அதிகாரம் மற்றும் இஸ்ரவேலின் உடன்படிக்கையின் இரண்டாம் படி, தேவனுடைய உடன்படிக்கையின் மத்தியஸ்தரான மோசேயின் மீதான இஸ்ரவேலரின் நம்பிக்கையில் கவனம் செலுத்துகிறது. யாத்திராகமம் 19-ஆம் அதிகாரம் 8-ஆம் வசனத்தின் இரண்டாம் பகுதியில் தொடங்கும் இப்பகுதி 20:20



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வரைத் தொடர்கிறது. யாத்திராகமம் 19:9 இல் தேவன் மோசேக்கு வாக்குப்பண்ணினதைப் பார்க்கும்போது இது நினைவுக்கு வரும்:

> நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார் (யாத்திராகமம் 19:9).

“ஜனங்கள் என்றென்றும் மோசேயை விசுவாசிக்கும்படி” தாம் சீனாய் மலையில் தோன்றி, மோசேயுடன் பேசப் போவதாக தேவன் சொல்வதைக் கவனியுங்கள். அதன் பின்னர் வரும் காட்சிகள் தேவன் எவ்வாறு தம் வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொண்டார் என்பதை விளக்குகின்றன.

இந்தப் படியின் முக்கிய பகுதி, தேவனுடைய அறிவுறுத்தல், மோசேயின் கீழ்ப்படிதல் மற்றும் தேவன் பிரசன்னமாதல் ஆகியவற்றைப் பற்றிய இணையான இரு தொடர்களைக் கொண்டுள்ளது. 19:10-19 லுள்ள முதல் தொடரில், இஸ்ரவேலர் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படுமாறு தேவன் மோசேயிடம் அறிவுறுத்துகிறார். தேவனுடைய கட்டளைக்கு மோசே கீழ்ப்படிந்தார், அதன் விளைவாக சீனாய் மலையில் ஒரு தத்ரூபமான காட்சி நடந்தேறியது – அங்கு, மகிமையான, காணக்கூடிய மற்றும் கேட்கக்கூடிய விதத்தில் தேவ பிரசன்னம் வெளிப்பட்டது.

அதன் பின்னர், யாத்திராகமம் 19:20-25 இல் இரண்டாம் தொடரை வாசிக்கிறோம். தேவன் மீண்டும் ஒருமுறை ஜனங்களை ஆயத்தம் பண்ணும்படி மோசேக்குச் சொன்னார், மோசேயும் கீழ்ப்படிந்தார். அதன் விளைவாக, 20:1-17 இல் இப்பகுதி, இஸ்ரவேலர் அனைவரும் கேட்க தேவன் பத்துக் கற்பனைகளை கூறியதான சீனாய் மலைக் காட்சிக்குத் திரும்புகிறது.

இப்பிரிவின் தொடக்கப் பகுதியை சமநிலைப்படுத்தும் விதத்தில் தேவன் மோசேக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறியது என்று யாத்திராகமம் 20:18-20 விளக்குகிறது. இவ்வசனங்கள், மலையில் தேவனுடைய சத்தத்தைக் கேட்ட பின்னர் மிகவும் பயந்து போன இஸ்ரவேலர்கள் தேவன் தங்களுடன் நேரடியாகப் பேசாதிருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். தேவனிடமிருந்து கேட்டுத் தங்களுக்குச் சொல்லுமாறு மோசேயிடம் கெஞ்சினார்கள். இந்த வேண்டுகோள் இரண்டாம் தலைமுறையினருக்கு ஏற்படுத்திய தாக்கம் மிகத் தெளிவானது. அவர்கள் தங்கள் முன்னோர்களைப் போல மோசேயை தேவனுடைய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகக் கொள்ள வேண்டும்.

**மோசேயின் உடன்படிக்கை நியமம் (20:21–23:33).** மோசேயின் அதிகாரத்தையும் இஸ்ரவேலின் உடன்படிக்கையையும் பற்றிய இப்பகுதியிலுள்ள மூன்றாம் படி யாத்திராகமம் 20:21-23:33 இல் காணப்படுகிறது. இந்த அதிகாரங்கள் மோசேயினுடைய உடன்படிக்கை நியமத்தை வழங்குகின்றன. இப்படி முழுவதும், தேவன் தாமே இஸ்ரவேலருக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கும்படி மோசேக்குக் கட்டளையிட்டார் என்பதைக் குறிப்பிட்டு மோசேயின் அதிகாரத்தை நியாயப்படுத்துகிறது.

20:21-26 இல் அறிமுகப்படுத்தப்படும் இப்பகுதியில், விக்கிரகங்கள் மற்றும் பலிபீடங்களைப் பற்றிய குறிப்புகளோடு ஆராதனைக்கான தம் நியமங்களை இஸ்ரவேலருக்குக் கொடுக்குமாறு தேவன் மோசேக்கு அறிவுறுத்துகிறார். இவ்வசனங்கள், பத்துக் கட்டளைகளின் முதல் இரண்டு கற்பனைகளை மிகப்பெரிய அளவில் விளக்குகின்றன. இதைத் தொடர்ந்து, 21:1-23:33 இல், உடன்படிக்கை புத்தகத்தில் உள்ளவற்றை இஸ்ரவேலருக்குச் சொல்லுமாறு தேவன் மோசேயிடம் கூறுகிறார்.

இஸ்ரவேலில் உடன்படிக்கையின் புத்தகம் எப்படி செயல்பட வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள, யாத்திராகமம் 21:1 இல் தேவன் உடன்படிக்கையின் புத்தகத்தை இவ்விதமாக விவரித்ததை கவனிப்பது அவசியம்:

> நீ அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய பிரமாணங்களாவன (யாத்திராகமம் 21:1)

இங்கு “பிரமாணங்கள்” என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கும் எபிரெய பதம் (*ஹாமிஷ்பாட்டிம்*) (*הַמִּשְׁפָּטִים*) என்பதாகும். “சட்ட நியமங்கள்” அல்லது “வழக்குச் சட்டங்கள்” என்பவற்றையும் குறிக்கிறது. உடன்படிக்கை புத்தகத்திற்கான இப்பெயர், மோசேயின் மூலம் தேவன் கொடுத்த இருவிதமான உடன்படிக்கை சட்டத்தைக் குறிப்பதை தெளிவாக உணர்த்துகிறது. குறிப்பாக, பத்துக் கற்பனைகள் இஸ்ரவேலில் சட்டங்களாக அல்லது பொதுவான சட்டக் கொள்கைகளாக செயல்பட்டன. உடன்படிக்கையின் புத்தகம் பலதிறப்பட்ட தலைப்புகளில் இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் பின்பற்ற வேண்டிய சட்டரீதியான கொள்கைகளை வழங்கியது. இந்தக் கொள்கைகளில் பல, *ஹமுராபி சட்ட விதி* மற்றும் பண்டைய கிழக்கத்திய நியாயப்பிரமாண விதிமுறைகளுக்கு ஒத்திருந்தன. இவ்விதிமுறைகளும், உடன்படிக்கையின் புத்தகமும் நியாயாதிபதிகள் தங்கள் தேசங்களில் பயன்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டன.

> உடன்படிக்கையின் புத்தகத்தில், கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் ஆயிர வருடங்கள் முதல் இரண்டாம் ஆயிர வருடங்கள் வரை பண்டைய கிழக்கத்திய பகுதிகளில் இருந்த சட்டங்களுக்கு இணையான பல சட்டங்கள் உள்ளன. ஒரு உடன்படிக்கையின் சூழலில் அமைந்திருக்கிறது என்னும் ஒரேயொரு வித்தியாசம் மட்டுமே இதில் உள்ளது. இவற்றில் மிகவும் பிரசித்தி பெற்றதும், இச்சட்ட விதிமுறைகளில் மிக விரிவானதுமானது ஹமுராபி கோட் ஆகும்... “இதைச்-செய்தால்” என்னும் மாதிரியைப் பின்பற்றி உருவாக்கப்பட்டிருக்கும் இச்சட்டங்கள் யாத்திராகமம் 21:1



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முதல் 22:16 வரை கொடுக்கப்பட்டுள்ள நியாயப்பிரமாணம் உருவாக்கப்பட்ட அதே முறையில் அமைக்கப்பட்டுள்ளன. அதில், "செய்தால்" என்பதைத் தொடர்ந்து வரும் பகுதியில், சூழ்நிலைகளுக்கான அரசாங்க ஒப்புதல்கள் கொடுக்கப்படுகின்றன. "இதைச்-செய்தால்" என்னும் அமைப்பு வழக்குச் சட்ட வடிவத்தில் அமைந்த சாதாரண மாதிரி வடிவமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். இதன் உண்மையான விபரங்களை கவனிக்கும்போது, பண்டைய இஸ்ரவேல் சமுதாயமும், மெ**சொ** ப்**பொ**த்தாமியாவிலிருந்த நகர-மாநிலமாகிய பண்டைய பாபிலோனிய சமுதாயமும் முற்றிலும் வேறுபட்டிருந்திருக்கின்றன. பாபிலோனைப் போன்ற ஒரு நகர-மாநிலம் சுயாதீனமுள்ளவர்களையும், சுயாதீனராகப் பிறந்தவர்களையும், மற்றொரு நிலையில் சாதாரண மனிதர்களையும், அடிமைகளையும் கொண்ட பல அடுக்குச் சமுதாயமாக இருந்திருக்கிறது. அதோடு, சமுதாயத்தில் இருந்த வெவ்வேறு பொருளாதாரப் பங்குகளின் அடிப்படையில் வித்தியாசமான பொருளாதார நிலைகளையும் கொண்டதாக இருந்திருக்கிறது. அங்குள்ள ஒரு வல்லமையான ஆலய வளாகம் அவர்களின் முழு பொருளாதாரத்திலும் பெரும்பங்கு வகிக்கிறது. ராஜரீக அரண்மனையான அதன் அரண்மனை சமுதாய அமைப்பில் முதன்மை காரணியாக விளங்குகிறது. மேலும் அது, பெரும்பாலும் மத்தியகால நிலப்பிரபுத்துவ சமுதாயத்தைப் போன்ற நிலப்பிரபுத்துவ சமுதாயமாக உள்ளது. இஸ்ரவேலர்களின் சமுதாயமோ அதிகமாக, நவீன தனிநபர்த்துவ முறையில் அல்லாமல், வேளாண் பொருளாதாரம் மற்றும் நில ஆதிக்கத்திற்கான பழங்குடி ஒழுங்குமுறை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சமத்துவ சமுதாயமாக உள்ளது. ஆகவே, ஹமுராபி கோட்-இல் இருப்பது போன்ற அதே வித்தியாசமோ அல்லது அடுக்குமுறை சமுதாயமோ அங்கில்லை என்று சொல்லலாம்.

– Dr. டக்ளஸ் கிராப்

**உடன்படிக்கையின் அங்கீகாரம் (24:1-11).** மோசேயின் அதிகாரம் மற்றும் இஸ்ரவேலின் உடன்படிக்கை பற்றிய பகுதியின் நான்காம் மற்றும் இறுதிப் படியான யாத்திராகமம் 24:1-11, உடன்படிக்கை அங்கீகரிக்கப்படுவதைப் பற்றி பதிவு செய்துள்ளது. இந்நான்காம் படி, யாத்திராகமம் 19:1 முதல் 8-ஆம் வசனத்தின் முதல் பகுதி வரையுள்ள உடன்படிக்கையின் துவக்கப்பகுதியில் தொடங்கியதை நிறைவு செய்கிறது. குறிப்பாக, யாத்திராகமம் 24:3 மற்றும் 7



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வசனங்கள் 19:8-ஐ எதிரொலிக்கும் பகுதியில், இஸ்ரவேலர் தேவன் தங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் செய்வதாக ஒருமனதுடன் கூறியது பதிவு செய்யப்பட்டுள்ளதை கவனியுங்கள்.

இதற்கும் அப்பால், இப்பகுதியின் கடைசிக் காட்சி, இஸ்ரவேலின் மூப்பர்கள் எவ்வாறு சீனாய் மலையில் ஏறி, தேவனைக் கண்டு, தங்களுக்குள் அற்புதமாக ஒருமனப்பட்டு புசித்துக் குடித்தார்கள் என்பதை விவரிக்கிறது. யாத்திராகமத்தின் ஆதி வாசகர்கள் ஒருவேளை கொண்டிருக்கக் கூடிய தயக்கங்களை அகற்றும்படி தேவனுடனான சமாதானம் மற்றும் இசைவின் இவ்வற்புத காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் எவ்வாறு தேவனுடன் சமாதானமாகவும், இசைவுடனும் இருக்க முடியும்? மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட தேவனுடைய உடன்படிக்கை நியமத்தின் நிலையான அதிகாரத்தை தங்கள் காலத்தில் ஏற்றுக்கொள்வதனாலேயே முடியும்.

யாத்திராகமம் 19:1-24:11-லுள்ள இஸ்ரவேலின் உடன்படிக்கையைப் பற்றிப் பார்த்ததன் மூலம் கானானுக்குள் செல்ல மோசேயும் இஸ்ரவேலரும் சீனாய் மலையில் ஆயத்தமானதை ஆய்வு செய்தோம். இப்போது, யாத்திராகமம் கவனம் செலுத்தும் கடைசி முக்கியப் பகுதிக்குத் திரும்புவோம். யாத்திராகமம் 24:12-40:38 இல் மோசேயின் அதிகாரமும், இஸ்ரவேலரின் ஆசரிப்புக்கூடாரமும் வலியுறுத்தப்படுகின்றன. இவ்வதிகாரங்கள் தேவனுடைய ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதில் மோசேக்கு இருந்த மிக முக்கியமான பங்கில் கவனம் செலுத்தி, மோசேயின் நிலையான அதிகாரத்தை ஆதரிக்கின்றன.

## இஸ்ரவேலரின் ஆசரிப்புக்கூடாரம் (24:12-40:38)

பெரும்பாலான வேதபாட மாணவர்கள் இஸ்ரவேலரின் ஆசரிப்புக்கூடாரம் என்பது ஆராதனை நடக்கும் ஒரு சிற்றாலயத்தை விட சற்று பெரியது என்று நினைக்கிறார்கள். ஆனால், அது அதை விட மிகப் பெரியது என்பதை சமீபத்திய தொல்பொருள் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன. பண்டைய எகிப்தில் பார்வோன்கள் வெளியிடங்களுக்குத் தங்கள் இராணுவங்களுடன் சென்று போர்புரிவது வழக்கம். அப்படிச் செய்யும்போது, நகர்த்தக்கூடிய அரண்மனை போன்ற பெரியதொரு கூடார அமைப்பில் அவர்கள் தங்குவார்கள். அத்தகைய ராஜரீக போர்க்கூடாரங்களில் முற்றம் சூழ்ந்து மூடப்பட்ட உள் மற்றும் வெளி அறைகள் இருந்தன. இந்தக் கூடாரங்களில், இராணுவங்கள் தங்கள் ராஜாவுக்கு மரியாதை செலுத்தி, ராஜாவிடமிருந்து வழிநடத்தல்களைப் பெற்றுக் கொள்வார்கள். இதேவிதமாக, தேவனுடைய ஆசரிப்புக்கூடாரத்தை ஆராதனைக்கான ஒரு சிற்றாலயத்திலும் பெரிதாக யாத்திராகமம் வழங்குகிறது. அது அவருடைய ராஜரீகக் கூடாரம். இப்படியிருக்க, அங்குதான் இஸ்ரவேலின் சேனைகள் தங்கள் தெய்வீக ராஜாவுக்கு மரியாதை செலுத்தினார்கள், இஸ்ரவேலின் தெய்வீக ராஜாவும் இஸ்ரவேலின் சேனைகளை வழிநடத்தி வந்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**ஆசரிப்புக்கூடாரத்திற்கான கட்டளைகள் (24:12–31:18).** மோசேயின் அதிகாரம் மற்றும் இஸ்ரவேலரின் ஆசரிப்புக்கூடாரம் பற்றிய பதிவு மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிகிறது. 24:12-31:18 லுள்ள முதல் பகுதியில் ஆசரிப்புக்கூடாரத்திற்காக தேவன் மோசேக்குக் கொடுத்த கட்டளைகள் உள்ளன. ஆசரிப்புக்கூடாரத்திற்கான தேவனுடைய குறிப்புகள் யாத்திராகமம் 24:12-18 இல் கற்பலகைகளில் பத்துக் கற்பனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தேவன் மோசேயை அழைத்ததில் தொடங்குகின்றன. பின்னர், ஆசரிப்புக்கூடாரத்திற்கான தேவனுடைய தனிப்பட்ட குறிப்புகள் 25:1-31:17 இல் வருகின்றன. இக்குறிப்புகள் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிமுட்டுகள் மற்றும் கட்டமைப்பைப் பற்றிய விபரங்களை விளக்கமாகக் கொடுக்கின்றன. அதோடு, தேவன் ஆசாரியர்கள், கலைஞர்கள், திறமையுள்ள வேலையாட்கள் என ஆசரிப்புக்கூடார வேலையில் இருக்க வேண்டிய ஆட்கள் மற்றும் வழக்கங்களைப் பற்றிய வழிமுறைகளையும் குறிப்பிட்டார். வாராந்திர ஓய்வுநாள் பற்றிய நேரடிக் குறிப்புகளையும் கொடுத்தார். தேவனுடைய ராஜரீக போர்க்கூடாரத்தில் குறிப்பிட்ட வழிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை இவ்விபரங்களின் எண்ணிக்கையும், அளவும் பிரதிபலிக்கின்றன. இந்த முக்கிய குறிப்புகளுக்குப் பின்னர், யாத்திராகமம் 31:18 இல் மோசே பத்துக் கற்பனைகள் அடங்கிய கற்பலகைகளை வெற்றிகரமாகப் பெற்றுக் கொள்வதைக் காண்கிறோம். இதுவே ஆசரிப்புக்கூடாரத்திற்கான தேவனுடைய கட்டளைகளைகளின் நிறைவாக இருக்கிறது.

இப்பகுதியில், பல தருணங்களில், தம்முடைய வழிமுறைகள் சீனாய் மலையிலிருந்த இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல என்பதை தேவன் வெளிப்படையாகக் குறிப்பிட்டார். அவை யாத்திராகமத்தின் இரண்டாம் தலைமுறை வாசகர்களுக்கும் உரியவையாகும். யாத்திராகமம் 27:21; 28:43; 29:9,42; 30:21; மற்றும் 31:16 போன்ற வேத பகுதிகளில், “தலைமுறைதோறும் கொடுக்கப்பட்ட நிலையான பிரமாணம்” என்னும் வாக்கியத்தை பலவிதங்களில் தேவன் சொல்லியிருக்கிறார். இது, ஆசரிப்புக்கூடாரத்திற்கான அவருடைய கட்டளைகளைப் பல்வேறு அம்சங்கள் எவ்வாறு அதன் பின் வரப்போகும் தலைமுறையினரால் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டது. ஆதி வாசகர்களுக்கு நிச்சயமாக இக்குறிப்புகளின் விபரம் தெளிவாக இருந்திருக்கும். அவர்கள் தங்கள் காலத்திலும் ஆசரிப்புக்கூடாரத்திற்கான தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

> யாத்திராகமம் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி கூடாரத்தை ஒன்றாக இணைக்கும் விதத்தில் தொழில்நுட்பத்தில் பல இணைகள் உள்ளன, இதை தூண்கள் மற்றும் நிலைகளுடன் எவ்வாறு ஒன்றாக இணைக்க முடியும் என்பது பற்றியும் எளிதாக ஒரு இடம் விட்டு வேறு இடம் கொண்டு செல்வதற்கு அவைகளை பிரித்து



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சுமந்து செல்வது பற்றியும் இது கூறுகிறது. பல காலங்களில் எகிப்தில் அதற்கு இணைகள் உள்ளன, ஆனால் மிகச்சிறந்த இணையானது அபு சிம்பல் கோவிலில் நடந்த காதேஷ் போரில் இரண்டாம் ராம்சேஸின் நிவாரணம் ஆகும், இது அவர் வென்றதாகக் கூறப்படும் காதேஷ் போரை நினைவுகூருகிறது, ஆனால் அந்தப் போரில் அவர் உயிருடன் தப்பியதே அதிர்ஷ்டம் என்று பல வேத அறிஞர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அபு சிம்பெல்லின் சுவரில் அவரது சொந்த கூடாரம், அவரது சொந்த போர் கூடாரம் ஆகியவை சித்தரிக்கப்பட்டுள்ளன, மேலும் இது அவரது சிம்மாசன அறையாக இருந்திருக்க வேண்டும், அது ஒரு சதுர உட்புற அறையுடன் கூடிய கூடாரத்தின் அதே பரிமாணங்களைக் கொண்டிருந்திருக்க வேண்டும். ஒரு நீண்ட நடைபாதை இருந்தது, அது உள் அறையை விட இரண்டு மடங்கு நீளமாக இருந்திருக்க வேண்டும், அதற்கு வெளியே ஒரு செவ்வக முற்றம், கூடாரத்தைச் சுற்றியுள்ள செவ்வக முற்றத்தைப் போன்றதாக இருந்திருக்க வேண்டும். மேலும், எண்ணாகமம் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளதைப் போலவே, அவனது படையின் நான்கு பிரிவுகளும் அவனது முகாமின் நான்கு பக்கங்களிலும் வைக்கப்பட்டிருப்பதை சித்தரிப்பில் நாம் காணலாம். ஆசரிப்பு கூடாரம் முதலில் லேவியர்களால் சூழப்பட்டு பின்னர் நான்கு திசைகளிலும் மூன்று கோத்திரங்களின் நான்கு தொகுப்புகளால் சூழப்பட்டுள்ளது.
>
> – Dr. டக்ளஸ் கிராப்

**தோல்வி மற்றும் புதுப்பித்தல் (32:1-34:35).** ஆசரிப்பு கூடாரத்திற்கு தேவன் தந்த அறிவுறுத்தல்களுக்குப் பிறகு, மோசே இஸ்ரவேலின் தோல்வி மற்றும் புதுப்பித்தலை யாத்திராகமம் 32:1–34:35 இல் சீனாய் மலையின் அடிவாரத்தில் விவரித்தார். இந்த அதிகாரங்கள் மூன்று முக்கிய பாகங்களாகப் பிரிகின்றன. 32:1-35 இல், இஸ்ரவேலர்கள் சீனாய் மலையில் தங்கக் கன்றுக்குட்டியை வணங்குவதன் மூலம் தேவனுடனான உடன்படிக்கையை முறித்துக் கொண்டதைப் பற்றி வாசிக்கிறோம். இந்த அதிகாரங்கள் மோசேயின் அதிகாரத்தை உறுதிப்படுத்துகின்றன, ஏனென்றால் மோசே தன்னை இஸ்ரவேலுடன் நெருக்கமாக அடையாளப் படுத்தி அவர்களுக்காக பரிந்து பேசினார். தனது உயிரைப் பணயம் வைத்து, மோசே மத்தியஸ்தம் செய்து இஸ்ரவேல் மீது தேவனின் தயவைப் பெற்றார். மேலும் தேவன் தேசத்தை முற்றிலுமாக அழிக்கவில்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிறகு, இந்தப் பகுதியின் இரண்டாவது படி, யாத்திராகமம் 33:1-23 இல், தேவன் இல்லாத நிலைக்கு மாறுகிறது. தேசத்தை உடனடியாக அழிக்க மாட்டேன் என்ற தேவன், மோசேயை முன்னேறும்படி கட்டளையிட்டார். ஆனால் வழியில் இஸ்ரவேலை அழிக்கக்கூடி நிலை வரும் என்பதால் தேவன் அவரது இருப்பை அகற்றி விடுவேன் என அச்சுறுத்தினார். ஆனால் மீண்டும், மோசே தன்னை தேசத்துடன் அடையாளப்படுத்திக்கொண்டு, இஸ்ரவேலின் சார்பாக வெற்றிகரமாகப் பரிந்து பேசினார், தேவனின் பிரசன்னம் இருக்காது என்கிற அச்சுறுத்தலை நீக்கிவிட்டார்.

இந்த பிரிவின் மூன்றாவது படி, 34:1-35 இல், இஸ்ரவேலுடன் தேவன் உடன்படிக்கையை புதுப்பித்தலை பேசுகிறது. தேவன் தனது உடன்படிக்கையைப் புதுப்பிப்பதன் மூலம் கானானை நோக்கி இஸ்ரவேலுடன் செல்வார் என்று தேவன் உறுதிப்படுத்தினார். உடன்படிக்கையின் புதுப்பித்தலின் போது அவரது பயனுள்ள பரிந்து பேசுதல்களைப் பற்றி எடுத்துரைப்பதன் மூலம் இந்த அதிகாரம் மோசேயை இஸ்ரவேலின் தலைவராக உயர்த்துகிறது.

**ஆசாரிப்பு கூடாரத்தின் நிறைவு (35:1–40:38).** இறுதியாக, மோசேயின் அதிகாரம் மற்றும் இஸ்ரவேலின் ஆசரிப்பு கூடாரம் பற்றிய பகுதி யாத்திராகமம் 35:1–40:38 இல் ஆசரிப்பு கூடாரத்தின் நிறைவோடு முடிவடைகிறது. 35:1-3 இல் இந்த அதிகாரங்கள் வாராந்திர ஒய்வு நாளின் நினைவூட்டலுடன் தொடங்குகின்றன. பின்னர் தேவன் மோசேக்கு 35:4–39:43 இல் ஆசரிப்பு கூடாரத்தைக் கட்டவும் இயக்கவும் ஆணையிட்டார். யாத்திராகமம் 40:1-33 ஆசரிப்பு கூடாரத்தின் உண்மையான கட்டிடத்தை சித்தரிக்கிறது. இந்த வசனங்களில் உள்ள விவரங்கள், தேவனின் அரச போர்க் கூடாரமாகிய ஆசரிப்பு கூடாரத்தின் கட்டிடம் தேவனின் முந்தைய அறிவுறுத்தல்களுக்கு எவ்வாறு சரியாக ஒத்துப்போகிறது என்பதை நிரூபிக்கிறது. மேலும் இந்த பகுதி 40:34-38 இல் ஆசரிப்பு கூடாரம் நிறைவு பெற்றதன் விளைவின் பலனாக இஸ்ரவேலை தேவன் ஆசீர்வதித்ததுடன் நிறைவு பெறுகிறது.

இஸ்ரவேலின் மீதான தேவனுடைய ஆசீர்வாதத்தின் இறுதி காட்சி மீண்டும் மோசேயின் அதிகாரத்தில் கவனம் செலுத்துகிறது. தேவனுடைய ஆசரிப்பு கூடாரத்தின் அனைத்து நெறிமுறைகளையும் கவனிப்பதன் மூலம் மோசேக்கு கீழ்படிய ஆதி வாசகர்களை ஊக்குவித்தது, அதனால் அவர்களும் தேவனின் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். யாத்திராகமம் புத்தகத்தின் கடைசி வசனங்களான 40:36-38 ஐக் கவனியுங்கள்:

> இஸ்ரவேலரின் எல்லாப் பயணங்களிலும், கூடாரத்திற்கு மேலே இருந்து மேகம் உயரும் போதெல்லாம், அவர்கள் புறப்படுவார்கள்; ஆனால் மேகம் உயரவில்லை என்றால், அவர்கள் புறப்பட மாட்டார்கள் - அது உயரும் நாள் வரை அவர்கள் காத்திருப்பார்கள். இஸ்ரவேல் வம்சத்தார்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பண்ணும் எல்லாப் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது (யாத்திராகமம் 40:36-38).

கானானை நோக்கிய இஸ்ரவேலின் பயணங்களின் இந்த அற்புதமான தொகுப்புடன் மோசே தனது புத்தகத்தை முடித்தார். ஆசரிப்பு கூடாரத்திற்கான மோசேயின் அறிவுறுத்தல்களுக்கு முதல் தலைமுறை கீழ்படிந்ததால் தேவனின் பிரசன்னம் நிலைத்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். இரண்டாம் தலைமுறையினர் தேவனின் அற்புதமான பிரசன்னத்தை தங்கள் கண்களால் பார்க்க முடிந்தது. அவர்கள் வாக்குத்தத்த நிலத்தை கைப்பற்றும்போது தேவனின் பிரசன்னம் தங்களுடன் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினால், அவர்கள் மோசே ஆசரிப்பு கூடாரத்தைப் பற்றிக் கூறிய அறிவுறுத்தல்களுக்கு – தங்கள் தெய்வீக ராஜாவின் அரச போர் கூடாரத்திற்கான அறிவுறுத்தல்களுக்கு கீழ்படிய வேண்டும்.

இப்போது நாம் யாத்திராகமம் புத்தகத்தின் சில ஆரம்ப பரிசீலனைகள், அமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை ஆராய்ந்திருக்கிறோம், இப்போது இந்த புத்தகத்தின் முக்கிய கருப்பொருள்கள் என்கிற நம்முடைய மூன்றாவது முக்கிய தலைப்புக்கு திரும்ப வேண்டும். ஆதி வாசகர்களின் வாழ்க்கையை பாதித்த யாத்திராகமத்தில் உள்ள மிக முக்கியமான பிரச்சினைகள் யாவை? இன்று கிறிஸ்துவின் சீஷர்களுக்கு இந்த முக்கிய கருப்பொருள்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும்?

# முக்கிய கருப்பொருள்கள்

இந்த பாடம் முழுவதும், இஸ்ரவேலின் மீது மோசேயின் உறுதியான அதிகாரத்தை முன்னிலைப்படுத்த யாத்திராகமம் புத்தகம் எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். இந்த கருப்பொருள் முக்கியமானதாக இருந்தாலும், இந்த புத்தகத்தில் உள்ள ஒரே கருப்பொருள் இது மட்டுமே அல்ல என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வசனங்கள் மோசேயின் அதிகாரத்திற்கான ஒரு ஆதரவை உருவாக்கும் அதே வேளையில், இந்த முக்கிய, ஒன்றிணைக்கும் கருப்பொருள் தொடர்பான பல சிக்கல்களை நோக்கி கவனத்தை ஈர்ப்பதன் மூலம் இதை இவைகள் செய்கின்றன.

> யாத்திராகமம் உண்மையில் மோசேயின் அதிகாரத்தை விட வேறு பல கருப்பொருள்களை ஒன்றாக கொண்டு வருகிறது,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நாம் அதை பல, பல வழிகளில் சுருக்கலாம். ஆனால் புத்தகத்தின் முக்கிய கருப்பொருள்களை தொகுக்க மிகவும் பயனுள்ள உத்திகளில் ஒன்று, இந்த புத்தகம் தேவனுடைய ராஜ்யத்தை எவ்வாறு வலியுறுத்துகிறது என்பதை ஆராய்வதாகும். அது வேதாகமம் முழுவதும் காணப்படும் ஒரு கருப்பொருள் ஆகும், அது புதிய ஏற்பாட்டில் கூட அதன் உச்சத்தை அடைகிறது, எனவே இந்த புத்தகத்தில் இது ஒரு முக்கியமான கருப்பொருள் ஆகும். சில சமயங்களில் நவீன கிறிஸ்தவர்கள் இந்த யாத்திராகம புத்தகத்தின் அம்சத்தை இழக்கிறார்கள், ஆனால் தேவன் இஸ்ரவேலை சீனாய் மலையில் ஒரு நல்ல தேசமாக உருவாக்கிய நேரத்தையும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் ஒரு ராஜ்யமாகவும் பின்னர் உலகம் முழுவதும் ராஜ்யமாக ஆவதற்கும் அவர்களை தயார்படுத்திய நேரத்தையும் கையாள்கிறார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனவே, தேவனுடைய ராஜ்யத்திற்கு முக்கியத்துவத்துவம் தரப்படுவதை நாம் இந்த புத்தகத்தில் காணலாம், ஆனால் அதைப் பார்க்க சிறந்த வழிகளில் ஒன்று, யாத்திராகமம் தேவனை எவ்வாறு வகைப்படுத்துகிறது என்பதைப் பார்ப்பதாகும். யாத்திராகமம் புத்தகத்தில் தேவன் தான் ஒரு முதன்மை கதாபாத்திரம் ஆவார், அது தேவனைப் பற்றி சொல்ல நிறைய இருக்கிறது, ஆனால் அது முதன்மையாக தேவன் இஸ்ரவேலின் ராஜா என்பதை வலியுறுத்துகிறது.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

தேவனை ராஜா என்று *வெளிப்படையாக* குறிப்பிடும் முதல் புத்தகம் யாத்திராகமம் ஆகும். யாத்திராகமம் 15:1-18 இல், இஸ்ரவேலர்கள் செங்கடலை உலர்ந்த நிலத்தில் கடந்து சென்ற பிறகு, மோசேயும் இஸ்ரவேலரும் தேவனுக்கு ஒரு பாடலைப் பாடினர். பாடல் எகிப்தை விட்டு வெளியேறிய முதல் மற்றும் இரண்டாம் தலைமுறைகளின் அனுபவங்களை ஒன்றாக ஈர்க்கிறது. எகிப்திலிருந்து இஸ்ரவேலை தேவன் கடந்தகாலத்தில் விடுதலையடையச் செய்ததில் இது கவனம் செலுத்துகிறது, மேலும் கானானைக் கைப்பற்றி அங்கு குடியேறப் போகும் இஸ்ரவேலின் எதிர்கால வெற்றியின் மீதும் கவனம் செலுத்துகிறது. சுவாரஸ்யமாக, கடலில் மோசேயின் கடைசி வார்த்தைகள் கடந்தகாலத்தில் அவர்கள் எகிப்திலிருந்து பெற்ற விடுதலையையும் எதிர்காலத்தில் தேவனுடைய ராஜரீகத்தின் கீழ் கானானை கைப்பற்றுவதையும் குறிக்கின்றன. யாத்திராகமம் 15:18 யைக் கவனியுங்கள், அங்கு மோசே இந்த வார்த்தைகளுடன் சேர்ந்து தேவனைத் துதித்தார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் ராஜரீகம் பண்ணுவார் (யாத்திராகமம் 15:18).

இந்த வசனம் குறிப்பிடுவது போல, யாத்திராகமத்தில் இருந்த இரண்டு தலைமுறையினருக்கான தேவனின் வல்லமையான செயல்கள் இஸ்ரவேலின் தெய்வீக ராஜாவாகவும் "என்றென்றும் ஆட்சி செய்கிறவராகவும்" அவரது மகிமையை வெளிப்படுத்தின.

இந்த வெளிச்சத்தில், மோசேயின் நாட்களில் தேவனின் ராஜ்யத்தை யாத்திராகமம் நான்கு வழிகளில் கருத்தில் கொள்வதன் மூலம் யாத்திராகமத்தின் முக்கிய கருப்பொருள்களை ஒழுங்கமைக்க உதவியாக இருக்கும். முதலில், யாத்திராகமம் 1:1-4:31 இல் தேவனை இஸ்ரவேலின் ராஜ உடன்படிக்கை காப்பாளராக ஆராய்வோம். இரண்டாவதாக, யாத்திராகமம் 5:1-18:27 இல் இஸ்ரவேலின் வெற்றிபெற்ற ராஜ வீரனாக தேவனுக்கு யாத்திராகமம் எவ்வாறு சிறப்பு கவனம் செலுத்துகிறது என்பதை நாம் பார்ப்போம். அடுத்து, யாத்திராகமம் 19:1-24:11 இல் தேவன் ராஜ உடன்படிக்கை சட்டத்தை வழங்குபவர் என்ற கருப்பொருளைப் பார்ப்போம். இறுதியாக, யாத்திராகமம் 24:12-40:38 இல் தேவன் இஸ்ரவேலின் தற்போதைய போர்வீரர் என்கிற கருப்பொருளைப் பார்ப்போம். இந்த ஒவ்வொரு கருப்பொருளையும் பார்ப்போம், முதலில் தேவன் ஒரு ராஜ உடன்படிக்கை காப்பாளர் என்பதைப் பார்ப்போம்.

## உடன்படிக்கை காப்பாளர் (1:1-4:31)

தேவன் இஸ்ரவேலின் ராஜ உடன்படிக்கை காப்பாளர் என்கிற கருப்பொருள் யாத்திராகமம் புத்தகம் முழுவதும் தோன்றினாலும், இது முதன்மையாக யாத்திராகமம் 1:1-4:31 இல் வலியுறுத்தப்பட்டது. இந்த அதிகாரங்கள் மோசேயின் பிறப்புக்கு முந்தைய நிகழ்வுகள் தொடங்கி இஸ்ரவேல் மீது மோசே தலைவனானது வரையிலான நிகழ்வுகளை குறிப்பிடுகின்றன. உதாரணமாக நாம் யாத்திராகமம் 2:24 யை வாசிக்கலாம்:

> தேவன் அவர்கள் அழுகையைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் (யாத்திராகமம் 2:24).

இந்த வசனம் முக்கியமானது, ஏனென்றால், தனக்கு பயந்த மருத்துவச்சிகளை தேவன் ஆசீர்வதித்தார் என்ற சுருக்கமான குறிப்பைத் தவிர, யாத்திராகமம் தேவனை குறிப்பிடுவது இதுவே முதல் முறையாகும். எனவே, ஆரம்பத்தில் இருந்தே, யாத்திராகமம் தேவனை ராஜ உடன்படிக்கை காப்பாளராகவும், "அவருடைய உடன்படிக்கையை நினைவு கூர்ந்தவர்" என்பதையும் சித்தரித்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேத வசனங்கள் தேவனையும் அவருடைய உடன்படிக்கைகளையும் குறிப்பிடும் போதெல்லாம், அவைகள் அவரை இஸ்ரவேலின் தெய்வீக ராஜாவாக மறைமுகமாக குறிப்பிடுகின்றன. வேதாகம நாட்களில், பண்டைய கிழக்கில் உள்ள பெரிய ராஜாக்கள் மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்ததைப் போலவே தேவன் மக்களுடன் உடன்படிக்கை செய்தார். இன்று, நாம் பெரும்பாலும் இந்த சர்வதேச ஒப்பந்தங்களை "சர்வாதிகார ராஜாவுக்கும் சேவிக்கிற ராஜாவுக்கும் இடையே உள்ள ஒப்பந்தங்கள்" என்று அழைக்கிறோம். இந்த ஒப்பந்தங்களில், பெரிய அல்லது சர்வாதிகார ராஜாக்கள் சிறிய ராஜாக்கள் அல்லது சேவிக்கிற ராஜாக்களுடன் அல்லது அவர்களின் நாடுகளுடன் தீவிர ஒப்பந்தங்களை ஏற்படுத்தினர். தேவன் இஸ்ரவேலின் உண்மையுள்ள உடன்படிக்கை காப்பாளராகவும் அவர்களின் தெய்வீக ராஜாவாகவும் இருக்கிறார் என்பதை இஸ்ரவேலர்கள் புரிந்து கொண்டனர். மோசேயின் நாட்களில் செயல்படுவதன் மூலம் அவர் இஸ்ரவேலின் முற்பிதாக்களுடன் செய்த தனது உடன்படிக்கையை நிறைவேற்றினார். எனவே, மோசேயுடனான தேவனின் உடன்படிக்கை இஸ்ரவேலின் முற்பிதாக்களுடனான தேவனின் முந்தைய உடன்படிக்கைகளுக்கு முரணாக இல்லை. மாறாக, அது அவைகளின் நிறைவேறுதலாக இருந்தது. யாத்திராகமம் 3:14-15 இல் உள்ள இந்த முக்கியத்துவத்தைக் கவனியுங்கள், அங்கு தேவன் தனது நாமத்தை மோசேக்கு வெளிப்படுத்தினார்.

> நான் இருக்கிறவராகவே இருக்கிறேன். 'இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார்' மேலும், தேவன் மோசேயை நோக்கி: "ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக" (யாத்திராகமம் 3:14-15).

மூன்று வெவ்வேறு பெயர்களில் எகிப்தில் உள்ள இஸ்ரவேலர்களுக்கு தேவன் மோசேயின் மூலம் தன்னை அடையாளம் காட்டியதை இங்கே கவனிக்கவும்: "நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்," "நான் இருக்கிறேன்," மற்றும் "கர்த்தர்."

தேவன் ராஜ உடன்படிக்கை காப்பாளர் என்கிற கருப்பொருளுடன் இந்தப் பெயர்கள் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள, மூன்று பெயர்களும் ஒரே எபிரெய வினைச்சொல்லாகிய *הָיָה* (*ஹயா*) யின் வேறு பெயர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வார்த்தை பெரும்பாலும் "இருத்தல்" என்ற வினைச்சொல்லின் சில வடிவங்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எபிரெய மொழியில் இருந்து "நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்" - அல்லது "நான் இருக்கிறவராகவே இருப்பேன்" என்பதை மொழிப்பெயர்த்து சொல்வது எளிதானது. இதன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுருக்கமான ”நான்,” அல்லது ”நான் இருப்பேன்” என்பவை இந்த வினைச்சொல்லின் தன்மை வடிவங்களாகும். ஆனால் ”கர்த்தர்” என்று மொழிபெயர்க்கப்பட்ட பெயருக்கு இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவை.

”கர்த்தர்” என்ற சொல், எபிரெய மொழியில் நான்கு எழுத்துக்களைக் கொண்ட தேவனின் பெயரான *”யெகோவா”* என்பதிலிருந்து பெரும்பாலும் மொழிப்பெயர்க்கப்படுகிறது. சமீபத்திய தொல்பொருள் கண்டுபிடிப்புகள் இந்த வார்த்தையை ”யாஹ்வே” என்று உச்சரிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளன. யாஹ்வே என்பது பெரும்பாலும் கர்த்தர் என்று மொழிப்பெயர்க்கப்படுகிறது. ஆனால் இது உண்மையில் *”ஹயா”* என்ற வினைச்சொல்லின் படர்க்கை வடிவம் மற்றும் ”அவர்” அல்லது ”அவர் இருப்பார்” என்று மொழிபெயர்க்கப்படலாம். உண்மையில், எபிரெய மொழியின் சில மரபுகளைப் பின்பற்றி, ”அவர் இருக்க வைக்கிறார்” அல்லது ”அவர் இருக்க வைப்பார்” என்பது இதன் அர்த்தமாகிறது. இதே வழிகளில், ”நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்” என்பதை ”நான் இருக்க வைக்கிற பிரகாரமே இருக்கிறேன்” என்று மொழிபெயர்க்கலாம். மேலும் ”நான் இருக்கிறேன்” என்பதை ”நான் இருக்க வைக்கிறேன்” என்றும் மொழிபெயர்க்கலாம்.

இந்த புரிதல் சரியானது என்று கருதி, இந்த வசனங்களில் யெகோவா என்ற பெயரும், அதனுடன் தொடர்புடைய பெயர்களும், தேவன் தனது உடன்படிக்கை வாக்குத்தத்தங்களை *ஏற்படுத்தினார்* என்பதை நேரடியாக சுட்டிக்காட்டின. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் அவைகளை நிறைவேறச் செய்வதன் மூலம் முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்த உடன்படிக்கை வாக்குத்தத்தங்களை நிறைவேற்றினார்.

தேவன் தனது உடன்படிக்கை வாக்குத்தத்தங்களை உண்மையாக நிறைவேற்றுகிறார் என்பதை மோசே ஏன் வலியுறுத்தினார் என்பதைப் பார்ப்பது கடினம் அல்ல. ஆதியாகமம் 15:14 இல், அந்நிய தேசத்தில் இஸ்ரவேலுக்கு நிகழ்ந்த துயரங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதாக தேவன் வாக்கு கொடுத்தார். மோசேயின் வாசகர்கள் தேவன் தங்கள் நாளில் இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் என்பதை அறிந்து கொள்வது அவசியமானதாக இருந்தது. அவர்களின் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அவர்களுக்கு கிடைத்த ஒவ்வொரு ஆசீர்வாதமும் அவர்களின் தெய்வீக ராஜா முற்பிதாக்களோடு செய்த உடன்படிக்கையை காத்ததன் விளைவாகும் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும்.

பல விதங்களில் பார்க்கும்போது, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கும் இதுவே உண்மையாகும். தேவன் இஸ்ரவேலின் முற்பிதாக்களுடன் செய்த உடன்படிக்கைகளை *நமது* கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் காக்கிறார். ஆபிரகாமுடனான தேவனுடைய உடன்படிக்கையின் இறுதி நிறைவேற்றம் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடக்கத்தில், அவருடைய முதல் வருகையின் போது தொடங்கியது என்று லூக்கா 1:68-73 போன்ற பகுதிகள் நமக்குக் கற்பிக்கின்றன. இதோடு கூட,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கலாத்தியர் 3:15-18 போன்ற பகுதிகள் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது நாம் தேவனையும் ஆபிரகாமுக்கு அவர் அளித்த வாக்குத்தத்தங்களையும் தொடர்ந்து நம்ப வேண்டும் என்று கூறுகின்றன. மேலும், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நிறைவில், கிறிஸ்துவில் நாம் பெறப் போகும் மகிமையான நித்திய வெகுமதி இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் என்று ரோமர் 4:13 போன்ற வசனங்கள் கற்பிக்கின்றன.

நாம் கிறிஸ்துவில் இருக்கிறோம். ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் வாரிசு கிறிஸ்து ஆவார். மேலும் ஆபிரகாமுடனான தனது உடன்படிக்கையை தேவன் காக்காமல் இருக்க மாட்டார். இஸ்ரவேலின் உடன்படிக்கையை காப்பாற்றும் ராஜாவாக தேவனை வெளிப்படுத்தும் யாத்திராகமத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இது போன்ற நம் உலகத்திற்கு ஒத்த பயன்பாடுகள் வருகின்றன.

> தேவன் தனது உடன்படிக்கைக்கு எப்போதும் உண்மையுள்ளவர் என்பதை யாத்திராகமம் புத்தகம் நிரூபிக்கிறது, ஏனென்றால் இஸ்ரவேலர்கள் மோசேக்கு எதிராக கலகம் செய்தபோதும், தேவன் அவர்களுடன் கடந்த காலத்தில் செய்ததை அவர்கள் மதிக்கவில்லை என்றாலும் கூட, அவர்களை விடுதலையாக்கி தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். அவர்களின் கலகத்தின் காரணமாக தேவன் அவர்களை கைவிட்டிருக்க மாட்டார், ஆனால் அவர் அவர்களுக்கு நிர்ணயம் செய்த இலக்கை அவர் அடைய விரும்பினார். மேலும் தேவன் நம் அனைவரையும் அவரிடம் நெருங்கி வர இந்த இலக்கை நமக்காக நிர்ணயித்திருக்கிறார். தேவனிடமிருந்து நாம் எவ்வளவு தூரம் விலகி சென்றாலும், நாம் அவரிடம் நெருங்கி வரச் செய்கிறார். நாம் எவ்வளவு உடைந்து போனாலும், அவர் நம்மை நெருங்குகிறார், அதனால் அவர் நம்மை சரிசெய்ய முடியும், அவர் நம்மை வீட்டிற்கு அழைத்து வர முடியும். எனவே, யாத்திராகமம் தேவன் நம்மை அழைத்த வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருக்கிறது. நம்மை விடுவிக்க அவர் நமக்காக இருக்கிறார். உண்மையில், யாத்திராகமம் விடுதலையின் புத்தகமாகும். மக்கள் விழுந்துவிட்டார்கள், அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும், நாம் அதை ஒவ்வொரு நாளும் செய்கிறோம். தேவன் அதைச் செய்கிறார். நாம் அவருடைய கிருபையிலிருந்து விலகி ஓடும்போது கூட அவரிடமாக நம்மை விசேஷித்த விதத்தில் சேர்த்துக்கொள்கிறார்.

– Rev. Dr. சைப்ரியன் கே. குஷியெண்டா

இஸ்ரவேலின் ராஜ உடன்படிக்கை காப்பாளராக தேவன் இருக்கிறார் என்கிற முக்கிய கருப்பொருளைத் தவிர, யாத்திராகமம் 5:1–18:27 இல் இஸ்ரவேலின் வெற்றிபெற்ற ராஜ வீரராக தேவன் இருக்கிறார் என்கிற கருப்பொருளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுவதை நாம் கவனிக்க வேண்டும்.

## வெற்றிகரமான போர்வீரர் (5:1–18:27)

மோசேயின் நாளின் ஒவ்வொரு பெரிய பேரரசிலும் தொல்பொருள் கண்டுபிடிப்புகள் தெய்வீக மற்றும் மனித ராஜாக்கள் போரில் வெற்றி பெறுவது எவ்வளவு பொதுவானது என்பதைக் காட்டுகின்றன. எனவே, இஸ்ரவேலின் வெற்றி வீரனாக தேவனைப் பற்றியுள்ள ஒரு சிறு குறிப்பு கூட அவர் இஸ்ரவேலின் வெற்றிகரமான ராஜா என்பதற்கான அறிகுறியாகும்.

மோசே எகிப்தில் இருந்தபோது, தேவனை இஸ்ரவேலின் வெற்றிகரமான ராஜ வீரராக நாம் பார்ப்போம். மோசே மற்றும் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு அணிவகுத்துச் சென்றபோது அங்கு காணப்படுகிற இந்த கருப்பொருளை நாம் ஆராய்வோம். எகிப்தில் மோசே இருந்த காலகட்டத்தில் இருந்து ஆரம்பிக்கலாம்.

### எகிப்தில் மோசே

இந்த கருப்பொருள் யாத்திராகமம் முழுவதும் காணப்படுகிறது, ஆனால் குறிப்பாக இஸ்ரவேல் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற போது 5:1–13:16 இல் இதை நாம் காணலாம். எகிப்துக்கு எதிரான தேவனின் அற்புதமான நியாயத்தீர்ப்புகள் மோசேயின் அதிகாரத்தை உறுதிப்படுத்தியது. அதுமட்டுமல்ல, இஸ்ரவேலின் ராஜ வீரராக தேவனின் வெற்றியையும் அவைகள் வெளிப்படுத்தின.

யாத்திராகமம் 12:12 இல், தேவன் தனது மிகப் பெரிய நியாயத்தீர்ப்பின் முக்கியத்துவத்தை, அதாவது பஸ்காவின் நியாயத்தீர்ப்பை, இந்த வழியில் சுருக்கமாகக் கூறினார்:

> அந்த ராத்திரியிலே நான் எகிப்துதேசம் எங்கும் கடந்துபோய், எகிப்துதேசத்திலுள்ள மனிதர்முதல் மிருகஜீவன்கள்மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன். நானே கர்த்தர் (யாத்திராகமம் 12:12).

இந்த வசனத்தில் தேவன், ”நானே கர்த்தர்” அல்லது ”நானே [யெகோவா]” என்று அறிவித்ததைக் கவனியுங்கள். இங்கே மீண்டும், தேவன் தனது

உடன்படிக்கையின் நிறைவேறுதலை ஏற்படுத்துவதன் மூலம் அதை நினைவுகூருபவராக தன்னை அடையாளம் காட்டினார். இஸ்ரவேலின் வெற்றிகரமான ராஜ போர்வீரராக, அவர் "மனிதர்கள் மற்றும் விலங்குகளின் முதற்பேறானவைகளை" கொல்லப் போனார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எகிப்தியர்கள் தங்களை தேவனுடைய எதிரிகளாக்கிக் கொண்டதால் அவர் அவர்களையும் அவர்களது சமுதாயத்தையும் அழிக்கப் புறப்பட்டார். இந்த மனிதர்கள் மீது மட்டுமல்லாமல், தேவன் "எகிப்தின் அனைத்து தேவர்கள் மீதும் நியாயத்தீர்ப்பை கொண்டு வருவார்." அவர் எகிப்தியர்கள் வழிபடும் பொய்யான தேவர்களையும் பொல்லாத ஆவிகளையும் தோற்கடிப்பார்.

பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் எதிரான யெகோவாவின் அற்புதமான நியாயத்தீர்ப்புகளில் இந்த இருமையை நாம் காணலாம். இந்த நியாயத்தீர்ப்புகளில் பெரும்பாலானவை, எகிப்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொய் தேவர்களுக்கு எதிராக வெற்றியை கொண்டு வந்தன. உதாரணமாக, ஆரோனின் கோல் ஒரு சர்ப்பமாக மாறி, பார்வோனின் மந்திரவாதிகளின் சர்ப்பங்களை விழுங்கியபோது, அது பார்வோனுக்கு எதிரான வெற்றி மட்டுமல்ல. இது பார்வோனின் கிரீடத்தை அலங்கரித்த நாகப்பாம்பால் அடையாளப்படுத்தப்பட்ட தெய்வீக சக்தியின் மீதான வெற்றியாகும். தேவன் நைல் நதியை இரத்தமாக மாற்றியபோது, அவர் நைல் நதியுடன் தொடர்புடைய எகிப்திய தேவர்கள் மற்றும் தேவதைகள் மீது தனது வல்லமையை நிரூபித்தார். ஹப்பி, செபெக் போன்ற தேவர்கள் முதலையின் உருவத்தில் இருந்தனர், மேலும் க்னும் மற்றும் ஹாட்மெய்ட் போன்ற தேவர்கள் மீனின் உருவத்தை கொண்டிருந்தனர். தவளைகள் மூலமான வாதையானது எகிப்திய தெய்வமான ஹெகெட்டின் மீது தேவனின் வல்லமையைக் காட்டியது. அந்த தெய்வம் மனித உருவத்தையும் அதன் தலை தவளையின் தலையையும் கொண்டிருந்தது. எந்த எகிப்திய தேவர்களும் பேன்களுடன் உறுதியாக தொடர்புபடுத்தப்படவில்லை. ஆனால் வேத அறிஞர்கள் பூமியின் தேவனான கெப்பை இது குறிக்கலாம் என்று பல ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். இந்த வாதை எகிப்திய ஆசாரியர்கள் மற்றும் மந்திரவாதிகளையும் அவமானப்படுத்த உதவியது. பறக்கும் வண்டாக அடிக்கடி குறிப்பிடப்படும் கெப்ரே என்கிற தேவனுக்கு எதிராக ஈக்களின் வாதை வந்திருக்கலாம். எப்பிஸ், புச்சிஸ், மெனிவிஸ், பிடா மற்றும் ரே போன்ற காளைகளாக சித்தரிக்கப்பட்ட தேவர்களின் வரிசையில் கால்நடைகளின் மரணம் தேவனின் வல்லமையைக் காட்டியது, அதே போல் தேவர்களின் ராணியாகிய ஐசிஸ் மீதும் அழகு மற்றும் அன்பின் தெய்வமான ஹத்தோர் என்கிற பெண் தெய்வத்தின் மீதும் தேவனுடைய வல்லமை காட்டப்பட்டது. இந்த இரண்டு பெண் தெய்வங்களும் பசுக்களாக சித்தரிக்கப்பட்டன. நோய் மற்றும் குணப்படுத்துதலுடன் தொடர்புடைய செக்மெட் மற்றும் இம்ஹோடெப் தேவர்கள் மீது தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடாக கொப்பளங்களின் வாதை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வந்திருக்கலாம். கல்மழையின் நியாயத்தீர்ப்பு வானத்தின் தெய்வமான நட் மற்றும் வானத்தை உயர்த்தி நிறுத்திய ஷு மீது தேவனின் வல்லமையைக் காட்டியது. வெட்டுக்கிளிகளின் வாதை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கும் செனெஹேமை எதிர்க்கும் வகையில் இருந்தன. இருளின் நியாயத்தீர்ப்பு பெரிய சூரியக் தேவனாகிய ரே அல்லது அமோன்-ரே மீது யெகோவாவின் வல்லமையைக் காட்டியது. பின்னர் முதற்பேறான மரணத்தின் இறுதி வாதை, இனப்பெருக்கத்துடன் தொடர்புடைய தெய்வங்களான மின் மற்றும் ஐசிசை அவமானமடையச் செய்தது. இந்த தொடர்புகள் குறிப்பிடுவது போல், எகிப்தில் நிகழ்ந்த தேவனின் அற்புதமான நியாயத்தீர்ப்புகள் அவருடைய சரீரப் பிரகாரமான எதிரிகள் மீது மட்டுமல்ல, அவருடைய ஆவிக்குரிய எதிரிகளான சாத்தானின் சேனைகள் மீதும் அவருடைய வெற்றியைக் காட்டின.

மோசே எகிப்தில் இருந்தபோது, தேவனை இஸ்ரவேலின் வெற்றிகரமான ராஜ வீரராக நாம் பார்த்தோம். ஆனால் மோசே மற்றும் இஸ்ரவேலர்கள் யாத்திராகமம் 13:17–18:27 இல் சீனாய் நோக்கி அணிவகுத்தபோது மனித மற்றும் ஆவிக்குரிய எதிரிகள் மீது தேவனுடைய வெற்றியை நாம் காண முடியும்.

## அணிவகுத்தலில் (13:17–18:27)

நிச்சயமாக, சீனாய் மலைக்குச் செல்லும் வழியில் தேவன் இஸ்ரவேலின் இராணுவத்தை கஷ்டங்களின் வழியாக வழிநடத்தினார் என்பது அவரை இஸ்ரவேலின் ராஜ போர்வீரராக வெளிப்படுத்துகிறது. ஆனால் யாத்திராகமத்தின் இந்த அம்சத்தை விளக்குவதற்கான சிறந்த வழி செங்கடலில் மோசேயின் பாடலுக்கு திரும்புவதுதான். மோசே பாடிய யாத்திராகமம் 15:3-4 யைக் கவனியுங்கள்:

> கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம். பார்வோனின் இரதங்களையும் அவன் சேனைகளையும் சமுத்திரத்திலே தள்ளிவிட்டார் (யாத்திராகமம் 15:3-4).

இங்கே மோசே யெகோவாவை ”ஒரு போர்வீரன்” என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டார், பின்னர் ”[யாஹ்வே] என்பது அவருடைய நாமம்” என்று திரும்பத் திரும்ப கூறினார். தேவனுடைய நாமத்திற்கும் தேவன் ஒரு போர்வீரன் என்ற சொற்றொடருக்கும் இடையிலான இந்த நெருங்கிய தொடர்பு பழைய ஏற்பாட்டின் ”சேனைகளின் கர்த்தர்” அல்லது ”படைகளின் தேவன்” என்ற பழைய சொற்றொடரின் பின்னணியை உருவாக்கியது. அவருடைய நாமம் குறிப்பிடுவது போல, ராஜ போர்வீரராகிய தேவன் சேனைகளை அல்லது படைகளை உருவாக்குகிறார், மேலும் அவர் தனது எதிரிகளை தோற்கடிக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில், “பார்வோனுடைய இரதங்களையும் அவனுடைய சேனையையும்” “கடலில்” வீசியெறிந்து முறியடித்தார். பின்னர், யாத்திராகமம் 15:11 இல், மோசே சொன்னபோது

தேவனுடைய வெற்றியின் ஆவிக்குரிய பக்கத்தையும் அடையாளம் காட்டினார்:

> கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? (யாத்திராகமம் 15:11).

தேவனின் வெற்றி எகிப்தின் மனித ராணுவத்தின் மீது அவருடைய வல்லமையைக் காட்டியது மட்டுமல்லாமல், எகிப்தின் அனைத்து பொய்க் தேவர்களின் மீதும் அவருடைய வெற்றியைக் காட்டியது.

> தேவன் ஒரு வெற்றி வீரன் என்றால் என்ன? சரி, பண்டைய உலகில் தேவன் சிருஷ்டிப்பின் தேவனாகவும் உண்மையான ராஜாவாகவும் அறியப்படுகிறார், அதைத்தான் யாத்திராகமம் 15 இல் நாம் காண்கிறோம். 15:11 இல் இந்தப் துதியில் ஒரு பெரிய கேள்வியை இது கேட்கிறது: "கர்த்தரைப் போல யார் இருக்கிறார்?" ஒருவரும் இல்லை என்பதே பதில். யாரும் இல்லை, குறிப்பாக, தேவனைப் போன்ற வேறு கடவுள்களோ தெய்வங்களோ இல்லை. ஆகவே, தேவன் ஒரு வெற்றிகரமான போர்வீரன் என்பதைப் பற்றி நாம் பேசும்போது, தேவன் என்கிற பட்டத்திற்காக நூற்றுக்கணக்கான தெய்வங்கள் போட்டியிட்ட சூழலில் இது ஒரு சக்திவாய்ந்த அறிக்கையாகும். மற்றும் அடிப்படையில், வேதாகமம் செய்வது உண்மையில் நுட்பமானது. அது, "தேவனைப் போன்றவர் யார்?" என்ற கேள்வியைக் கேட்கிறது. யாரும் இல்லை என்பதே பதிலாகும். பிற தேவர்கள் இருப்பதாக நீங்கள் நினைக்கலாம், ஆனால் நாளின் முடிவில், தேவன் என்ற பட்டத்திற்கு தகுதியானவர் ஒருவர் மட்டுமே இருக்கிறார், அதுதான் நம்முடைய கர்த்தர். பின்னர் யாத்திராகமம் 15 "கர்த்தர் என்றென்றும் ராஜரிகம் செய்வார்" என்று முடிகிறது. இப்படிப்பட்ட போர்வீரன் தான் நமக்காகப் போராட நமக்கு வேண்டும்.
>
> – Dr. பிரையன் டி. ரஸ்ஸல்

இரண்டாம் தலைமுறை வாசகர்களுக்கு நம்பிக்கை அளிப்பதற்காக பார்வோன் மற்றும் அவனது பொய்யான தெய்வங்கள் மீது யெகோவா தேவனின் வெற்றியை யாத்திராகமப் புத்தகம் வலியுறுத்தியது. தேவனால் அவர்களுடைய மாம்ச மற்றும் ஆவிக்குரிய எதிரிகளையும் கூட தோற்கடிக்க முடிந்தது. கடந்த காலத்தில் தேவன் தங்கள் முற்பிதாக்களுக்காக எவ்வாறு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யுத்தம் செய்தார் என்பதை அவர்கள் கற்றுக்கொண்டனர். இந்த வழியில், அவர்கள் கானானை மேற்கொண்டு நுழைந்தபோது எதிர்காலத்தில் தேவன் தங்களுக்கு எவ்வாறு ஜெயத்தை அளிப்பார் என்பதையும் அவர்கள் கற்றுக்கொண்டனர்.

ஏறக்குறைய அதே வழியில், யாத்திராகமத்தில் தேவனின் மாபெரும் வெற்றியைப் பற்றி கிறிஸ்தவர்கள் அறியும்போது, கிறிஸ்துவின் வெற்றியைப் பற்றி புதிய ஏற்பாடு என்ன கற்பிக்கிறது என்பதை நாம் சிந்திக்கலாம். மத்தேயு 12:28 மற்றும் 29, யோவான் 12:31 மற்றும் கொலோசெயர் 2:15 போன்ற வேதபகுதிகளில், கிறிஸ்து தமது ராஜ்யத்தை ஆரம்பித்தபோது நம்முடைய தெய்வீக இராஜரீக வீரராகச் செயல்பட்டார் என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. ஆனால் சாத்தானையும், உலகின் பொய்யான தெய்வங்களையும் இயேசு தோற்கடித்த போது, தம்மிடம் சரணடையும் அனைவருக்கும் கிருபையாக மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதலை தேவன் அளித்தார்.

மேலும், 1 கொரிந்தியர் 15:25, எபிரேயர் 1:3 மற்றும் 1 பேதுரு 3:22 போன்ற வேதபகுதிகளில், இயேசு தமது ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது நமது இராஜரீக வெற்றிசிறந்த வீரர் என்பதை அறிகிறோம். சபை வரலாறு முழுவதும் சாத்தானையும் உலகில் உள்ள மற்ற அசுத்த ஆவிகளையும் தோற்கடிக்கும் கிறிஸ்துவின் உத்தியை நாம் பின்பற்ற வேண்டும். மேலும் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின் மூலம் தேவனுடன் மன்னிப்பையும் ஒப்புரவாகுதலையும் நாம் தொடர்ந்து அளிக்க வேண்டும்.

இறுதியாக, 2 தெசலோனிக்கேயர் 1:6 மற்றும் 7, எபிரேயர் 10:27, மற்றும் 2 பேதுரு 3:7 போன்ற வேதபகுதிகளில், அவருடைய ராஜ்யத்தின் நிறைவில் கிறிஸ்து மீண்டும் தெய்வீக இராஜரீக வீரராகத் திரும்பி வருவார். ஆனால் அவர் திரும்பியவுடன், கிறிஸ்துவின் இரக்கமுள்ள ஒப்புரவாகுதலின் சலுகை முடிவடையும். கிறிஸ்துவிடம் வர மறுத்தவர்கள் சாத்தான் மற்றும் அவனது கூட்டாளிகளின் ஆக்கினையை அனுபவிப்பார்கள் - இது தேவனின் நித்திய தீர்ப்பாகும்.

இஸ்ரவேலின் இராஜரீக உடன்படிக்கைக் காப்பாளர் மற்றும் வெற்றிசிறந்த இராஜரீகப் போர்வீரராக விளங்கிய தேவனின் முக்கிய கருப்பொருள்களைப் பார்த்த நாம், யாத்திராகமம் 19:1–24:11 இல் இஸ்ரவேலின் இராஜரீக உடன்படிக்கைச் சட்டத்தை வழங்கும் தேவனாக யாத்திராகமத்தின் மூன்றாவது பெரிய கருப்பொருளுக்கு நம் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

## உடன்படிக்கைச் சட்டத்தை வழங்குபவர் (19:1–24:11)

நாம் முன்பு பார்த்தபடி, இந்த வசனங்கள் மோசேயின் அதிகாரத்திற்கும் இஸ்ரவேலின் உடன்படிக்கைச் சட்டத்திற்கும் நம் கவனத்தை ஈர்க்கின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பண்டைய கிழக்கு தேசங்களில், மானிட மற்றும் தெய்வீக ராஜாக்கள் தங்களின் ஞானத்தை அவர்கள் கொடுத்த சட்டங்களின் மூலம் வெளிப்படுத்தியதாக மக்கள் நம்பினர். எனவே, யாத்திராகமத்தின் ஆதி வாசகர்களை தேவனே அவர்களின் இராஜரீக உடன்படிக்கைச் சட்டத்தை வழங்குபவர் என்பது ஆச்சரியப்படுத்தி இருக்காது. ஆனால், இந்த கருப்பொருளை மோசே எவ்வாறு வலியுறுத்தினார் என்பதை நாம் அங்கீகரிக்க, தேவன் தமது நியாப்பிரமாணமத்தை யாத்திராகமப் புத்தகத்தில் ஏன் கொடுத்தார் என்பதைப் பார்ப்பது உதவியாயிருக்கும்.

ஒவ்வொரு பெரிய புராட்டஸ்டன்ட் பாரம்பரியமும் நியாப்பிரமாணமத்தின் மூன்று முக்கிய பயன்பாடுகளைப் பற்றிப் பேசுகிறது. முதலாவது ”உசுஸ் பெடகாகிகஸ்” என்று பரவலாக அழைக்கப்படுவது, நியாப்பிரமாணமத்தின் கல்வியியல் பயன்பாடாகும். கலாத்தியர் 3:23-26, ரோமர் 3:20, மற்றும் ரோமர் 5:20 மற்றும் 21 போன்ற புதிய ஏற்பாட்டுப் பகுதிகள், பாவத்தைத் தூண்டுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தேவன் நியாப்பிரமாணமத்தைப் பயன்படுத்துகிறார் என்று போதிக்கிறது. இவ்விதமாக, மனிதர்கள் இரட்சிப்புக்காக கிறிஸ்துவிடம் வழிநடத்தப்படுகிறார்கள். இரண்டாவதாக, புராட்டஸ்டன்ட்கள் சில சமயங்களில் ”உசுஸ் சிவிலஸ்” என்று அழைக்கப்படுவதைக் குறிப்பிடுகின்றனர். இது நியாப்பிரமாணத்தின் குடிமை அல்லது அரசியல் பயன்பாடாகும். இந்தப் பயன்பாட்டில், தேவனுடைய தண்டனையின் அச்சுறுத்தலால் சமூகத்தில் பாவத்தை நியாப்பிரமாணம் தடுக்கிறது. ஆனால், பொதுவாக வேதாகமத்தின் போதனைகளுக்கு இந்தக் கண்ணோட்டங்கள் எவ்வளவு உண்மையாக இருந்தாலும், ”நியாப்பிரமாணத்தின் மூன்றாவது பயன்பாடு” என்று அழைக்கப்படுவதை யாத்திராகமப் புத்தகம் வலியுறுத்துகிறது. இது சில நேரங்களில் ”உசுஸ் நார்மடிவஸ்”, எனப்படும் நெறிமுறைப் பயன்பாடு அல்லது ”உசுஸ் டிடாக்டிகஸ்”, எனப்படும் அறிவுறுத்தல் பயன்பாடு எனக் குறிப்பிடப்படுகிறது. இவ்விஷயத்தில், தேவனுடைய நியாப்பிரமாணம் ஏற்கனவே அவருடைய கிருபையின் கீழ் இருப்பவர்களுக்கு நெறி அல்லது அறிவுறுத்தலாகும். எனவே, யாத்திராகமப் புத்தகத்தில், தேவன் தமது மக்களான இஸ்ரவேலரைத் தமது ஆசீர்வாதத்தை நோக்கி வழிநடத்தவே நியாப்பிரமாணமத்தைக் கொடுத்தார்.

இந்தக் கருப்பொருள் யாத்திராகமத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. ஆனால் இது குறிப்பாக இஸ்ரவேலுடனான தேவனின் உடன்படிக்கையின் துவக்கத்தில் தொடங்கி, உடன்படிக்கையின் அங்கீகாரத்தின் மூலம் தொடர்வது 19:1-24:11 இல் தெளிவாகத் தெரிகிறது. தேவன் இஸ்ரவேலர்களிடம் கூறிய யாத்திராகமம் 19:4 ஐக் கவனியுங்கள்:

> நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள் (யாத்திராகமம் 19:4).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இஸ்ரவேலர்கள் நியாப்பிரமாணத்தைப் பெறுவதற்கு முன்பு, அவர்கள் ஏற்கனவே தேவகிருபையை அனுபவித்திருந்ததை நாம் இங்கு பார்க்கிறோம். வசனங்கள் 5 மற்றும் 6 இல், நியாப்பிரமாணத்திற்கு இஸ்ரவேலர்கள் கீழ்ப்படியவும், அதனால் வரும் பற்றுறுதியின் நன்மைகள் என்னும் அவசியத்தை தேவன் உணர்த்தினார். அவர் இவ்வாறு கூறினார்:

> இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள். பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார். (யாத்திராகமம் 19: 5-6).

ஏற்கனவே தேவனுடைய கிருபையைப் பெற்றிருந்ததால், இஸ்ரவேல் அவருடைய சட்டத்திற்குக் கீழ்ப்படிந்தால், அவருடைய ”சொந்த சம்பத்தாக”, ”ஆசாரியர்களின் ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய்” இருக்கும். இஸ்ரவேலர் தங்கள் இரட்சிப்பைப் பெறுவதற்காக தேவனின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. அவர் ஏற்கனவே இஸ்ரவேலர்களுக்கு இரக்கம் பாராட்டிய பிறகு நியாப்பிரமாணமானது அவரது மக்களுக்கு அவர் வழங்கிய ஈவாகும்.

யாத்திராகமம் 20:1-17 இல் இதே போன்ற ஒரு முறை தோன்றுகிறது. 20:2 இல், தேவன் இஸ்ரவேலிடம் தம்முடைய இரக்கத்தை பிரகடனப்படுத்தி, பத்துக் கட்டளைகளைத் துவக்கினார்:

> உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே (யாத்திராகமம் 20:2).

மீண்டும் ஒருமுறை, தேவனுடைய இரக்கம் இஸ்ரவேலுக்கான அவருடைய நியாயப்பிரமாணத்தை முந்தியதைக் காண்கிறோம். இந்த அறிவிப்புக்குப் பிறகே தேவன் இஸ்ரவேலுக்கு பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். மேலும், பத்துக் கட்டளைகளில் பல வெளிப்படையாகக் கூறுவது போல், சட்டத்திற்குக் கீழ்ப்படிவதினிமித்தம் இஸ்ரவேல் மக்கள் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள்.

> ஒருவேளை சிலர் தேவ சட்டத்தை இடுக்கமாக்கி, அதைக் கிருபைக்கு எதிரானது என்று நினைக்கலாம். ஆனால் பழைய ஏற்பாட்டில் தேவன் நியாயப்பிரமாணத்தை வழங்கிய விதத்தை நாம் பார்க்கும்போது, தேவன் அதை வழங்கியது ஒரு கிருபையான விஷயம் என்பதை நாம் காணலாம். நாம் பார்ப்பது என்னவென்றால், தேவன் தம் மக்களை எகிப்தின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அடிமைத்தனத்திலிருந்து மீட்ட பிறகு அவர்களுக்குச் நியாயப்பிரமாணத்தை வழங்கினார். அவர் அவர்களை வெளியே அழைத்துச் சென்று, அவர்கள் சார்பாக வல்லமையான முறையில் இடைபட்டார். பின்னர் அவர் அவர்களை வனாந்தரத்திற்கு அழைத்து வந்து, அவர்களைத் தமக்கு கீழ்ப்படுத்தி, அவர்களின் மகா ராஜாவாகிய தேவனுடைய இராஜ்ஜியம் மற்றும் அரசாட்சியின் கீழ் அவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கான தமது திட்டத்தை வெளிப்படுத்துகிறார். எனவே, சட்டம் என்பது தம்முடைய மக்களை மீட்டுக்கொள்வதற்காகக் தேவன் அவர்களைக் கடைப்பிடிக்கச் சொன்ன ஒன்றல்ல. மாறாக, தேவன் அவர்களை எகிப்திலிருந்து மீட்டு, தம்முடைய ஜனங்கள் மகா ராஜாவாகிய தேவனை ஆண்டவராகக் கொண்டு அவரின் கீழ் ஜீவிக்க வேண்டும் என்பதையும், மீட்கப்பட்ட மக்களாக ஒருவருக்கொருவர் அவர்கள் எவ்வாறு ஜீவிக்க வேண்டும் என்பதையும் காட்டிய பிறகு நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டது. எனவே, பழைய ஏற்பாட்டில் உள்ள நியாயப்பிரமாணத்தைப் பற்றி நீங்கள் வாசிக்கும் போதெல்லாம், அது ஏற்கனவே தேவனுடைய கிருபையின் பின்னணியில் அவருடைய மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.
>
> – Dr. பிராண்டன் டி. க்ரோ

உடன்படிக்கையின் அங்கீகாரத்தின் போதும் தேவன் இந்த மாதிரியை வெளிப்படுத்தினார். யாத்திராகமம் 24:1 மற்றும் 2 இல், சீனாய் மலையில் தம்மிடம் வரும்படி இஸ்ரவேலின் மூப்பர்களை அன்புடன் அழைத்தார். வசனங்கள் 3-8 இல், மக்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதாக உறுதியளித்தனர். மற்றும் வசனங்கள் 9-11 இல், இஸ்ரவேல் மூப்பர்கள் தேவனுடன் சமாதானத்தின் ஆசீர்வாதத்தைக் கொண்டாடி, பின்பு உண்மையில் தேவனைத் தரிசித்தார்கள்.

ஆதி வாசகர்களைப் பொறுத்தவரை, கடந்த காலத்தில் தேவனுடைய சட்டத்தின் இரக்கம் மற்றும் நன்மை பயக்கும் தன்மையின் மீதான இந்த வலியுறுத்தல், அவர்களின் சொந்த நாட்களில் தேவனுடைய சட்டத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியத்தை எச்சரித்தது. நியாயப்பிரமாணம் அவர்களின் தற்போதைய சூழ்நிலையிலும் எதிர்காலத்திலும் தேவனின் வெகுமதியாகும்.

இதே வழியில், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, யாத்திராகமப் புத்தகத்தில் இஸ்ரவேலருக்கு தேவனின் கட்டளைகளைப் பார்க்கும் ஒவ்வொரு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முறையும், கிறிஸ்துவில் நமக்குத் தேவனுடைய கிருபையான மற்றும் நன்மை பயக்கும் கொடையாக நாம் பார்க்க வேண்டும்.

இப்போது, அவருடைய ராஜ்யத்தின் தொடக்கத்தில், இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் சபைக்கு மோசேயின் சட்டத்தை நம் காலத்திற்குப் பயன்படுத்த உதவும்படி புதிய வெளிப்பாடுகளை வழங்கினர் என்பதை நாம் அறிவோம். ஆனால் மத்தேயு 5:17, ரோமர் 8:4 மற்றும் எபிரேயர் 8:10 போன்ற பகுதிகள் இயேசுவும் அவரைப் பின்பற்றுபவர்களும் மோசேயின் நியாயப்பிரமாண அதிகாரத்தைத் தள்ளுபடி செய்யவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போதும் இதுவே உண்மையாகும். இன்று, கிறிஸ்து வரவில்லை என்பது போல் நாம் தேவனுடைய சட்டத்திற்குக் கீழ்ப்படிய முயற்சிக்கக் கூடாது. ஆனால் கிறிஸ்துவில் நாம் தேவனின் கூடுதலான வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் இன்று அதைப் பயன்படுத்த வேண்டும். மேலும், நமக்குத் தெரிந்தபடி, கிறிஸ்து தனது ராஜ்யத்தின் நிறைவில் திரும்பும்போது, அவருடைய மக்கள் பூரணமாகப் பரிசுத்தமாக்கப்படுவார்கள். அப்போது புதிய சிருஷ்டிப்பில் நம் இருதயங்களில் எழுதப்பட்ட தேவனுடைய பரிபூரண சட்டத்திற்குக் கீழ்ப்படிவோம்.

இஸ்ரவேலின் ராஜ உடன்படிக்கையைக் காப்பவராகவும், வெற்றிகரமான இராஜரீக வீரராகவும், ராஜ உடன்படிக்கையின் சட்டத்தை வழங்குபவராகவும் தேவனை ஆராய்வதன் மூலம் யாத்திராகமப் புத்தகத்தில் உள்ள முக்கிய கருப்பொருள்களைப் பார்த்தோம். இறுதியாக, யாத்திராகமம் 24:12-40:38 இல் உள்ள இஸ்ரவேலின் தற்போதைய யுத்தவீரர் தேவன் என்ற கருப்பொருளைப் பார்ப்போம்.

## தற்போதைய யுத்தவீரர் (24:12-40:38)

யாத்திராகமப் புத்தகம், இஸ்ரவேலின் மீது கர்த்தரின் அரசாட்சியை மிகவும் சுவாரசியமாக எடுத்துரைக்கிறது. பெரும்பாலும் மக்கள் பழைய ஏற்பாட்டைப் படிக்கும்போது, இஸ்ரவேலின் முதல் ராஜா சவுல் என்று நினைக்கிறார்கள். சவுல் பூமிக்குரிய முதலாவது ராஜா என்று சொல்லலாம். ஆனால் நீங்கள் யாத்திராகமம் 19:5 மற்றும் 6 ஐ வாசிக்கும்போது, அது இஸ்ரவேலை "ஆசாரியர்களின் ராஜ்யம்" என்று பேசுகிறது. சரி, ஒரு ராஜா இல்லாமல் ஒரு ராஜ்யத்தை நீங்கள் கொண்டிருக்க முடியாது. எனவே, உண்மையில், யாத்திராகமம் 19:5-6 இன் முன்னோக்கு என்னவென்றால், இஸ்ரவேலின் முதல் ராஜா உண்மையில் தேவனே ஆவார். பழைய ஏற்பாட்டில் தேவன் கிறிஸ்துவாக அவதாரம் எடுக்கவில்லை என்றாலும், அவர் தம்மை ராஜாவாகவும், கிறிஸ்துவில் தம்முடைய அரசாட்சியை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பகலில் மேக ஸ்தம்பமாகவும் இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் காணக்கூடியதாக ஆக்குகிறார். ஆசரிப்பு கூடாரம் ”தேவன் நம்மோடு இருக்கிறார்” என்னும் இம்மானுவேலின் அடையாளமாக மாறுகிறது. எனவே, தேவனின் அரசாட்சி இஸ்ரவேலுக்கு அவர் கொடுக்கும் இந்த புள்ளிவிவரங்கள் மற்றும் சின்னங்களில் தெரியும். இதன் மூலம் அவர் இஸ்ரவேல் மீது கிறிஸ்துவின் மூலமாகத் தனது சொந்த ஆட்சியையும் அரசாட்சியையும் காட்டுகிறார்.
>
> – Dr. டான் கோலெட்

யாத்திராகமம் 24:12-40:38 இல் தேவனின் ராஜ பிரசன்னத்தின் கருப்பொருளை மிகத் தெளிவாகக் காண்கிறோம். யாத்திராகமத்தின் இந்த நான்காவது பெரிய பிரிவு மோசேயின் அதிகாரம் மற்றும் இஸ்ரவேலின் ஆசரிப்புக் கூடாரத்தை மையமாகக் கொண்டுள்ளது. இவ்வாசஸ்தலத்திற்காக மோசேக்கு தேவன் எவ்வாறு அறிவுரைகளை வழங்கினார், சீனாய் மலையின் அடிவாரத்தில் இஸ்ரவேல் தோல்வியடைந்தது மற்றும் கூடாரத்தின் கட்டுமானத்தில் மோசே எவ்வாறு இஸ்ரவேலை வழிநடத்தினார் என்பதை இந்த அத்தியாயங்கள் ஒத்திகை பார்க்கின்றன. இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றும் தேவன் தம் மக்களுடன் இருப்பதை வலியுறுத்தியது. யாத்திராகமம் 33:14 இல், தேவன் மோசேக்கு உறுதியளித்தார்:

> அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார் (யாத்திராகமம் 33:14).

இந்த வசனத்தில் உள்ள ”என் சமுகம்” என்ற பதம், எபிரேய பெயர்ச்சொல் פָּנִים(*பானிம்*) என்பதை மொழிபெயர்க்கிறது. இது பொதுவாக ”முகம்” என்று மொழிபெயர்க்கப்படுகிறது. யாத்திராகமம் மற்றும் பிற இடங்களில் உள்ள பல வேதபகுதிகளில், தேவனுடைய ”முகம்” என்பது அவருடைய மக்களுடன் அவரது சிறப்பான, தீவிரமான, கவனமுள்ள மற்றும் அடிக்கடி காணக்கூடிய பிரசன்னத்தைக் குறிக்கிறது.

தேவன் எங்கும் நிறைந்திருந்தாலும், வேதாகமம் முழுவதிலும் அவர் தம்முடைய மக்களுக்கு விசேஷமான வழிகளில் தம்மை வெளிப்படுத்துகிறார். யாத்திராகமத்தின் இந்தப் பகுதியில், தேவனுடைய பிரசன்னம் வாசஸ்தலத்தின் அருகிலும், உள்ளேயும் தங்கியிருந்தது. இந்த பாடத்தில் நாம் முன்பே குறிப்பிட்டது போல், ஆசரிப்புக்கூடாரம் ஒரு தேவாலயம் அல்லது இஸ்ரவேல் மக்கள் ஆராதனை நடத்திய இடத்தை விட மேலானதாக இருந்தது. அது தேவனின் ராஜ போர்க் கூடாரமாக இருந்ததால் இஸ்ரவேலர் கூடாரத்தில் தேவனை ஆராதித்தனர். பண்டைய மானிட ராஜாக்கள் தங்கள் படைகளை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போருக்கு வழிநடத்தியபோது அரச போர் கூடாரங்களில் வாழ்ந்ததைப் போலவே, கானானைக் கைப்பற்றும் நோக்கில் இஸ்ரவேலின் இராணுவத்தை வழிநடத்த தேவன் தம் கூடாரத்தில் வாசம் பண்ணினார்.

இப்போது, யாத்திராகமம் 32:1–34:35 இல், தேவபிரசன்னம் தம்முடைய மக்களுடன் இருப்பது தீவிரமாக அச்சுறுத்தப்பட்டது. இத்தொடரில், இஸ்ரவேலின் தோல்வி மற்றும் சீனாய் மலையில் புதுப்பித்த உடன்படிக்கை பற்றி அறிந்து கொள்கிறோம். இஸ்ரவேலர்கள் சீனாயில் பொன்னாலான கன்றுக்குட்டியை வணங்குவதை தேவன் முதலில் பார்த்தபோது, மோசேயைத் தவிர முழு தேசத்தையும் அழித்துவிடுவேன் என்று எச்சரித்தார். ஆனால் மோசேயின் பரிந்துரையின் நிமித்தம், தேவன் மனஸ்தாபப்பட்டு, பாவம் செய்தவர்களை மட்டுமே தண்டித்தார். இன்னும், தேவன் தம்முடைய ஜனங்கள் முன்னேறிச் சென்றபோது அவர்களிடமிருந்து தம்முடைய பிரசன்னத்தை நீக்கிவிடுவதாக அச்சுறுத்தினார். ஆனால் தெய்வீக ராஜா இல்லாமல் முன்னோக்கி அணிவகுத்துச் செல்வது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. மோசே தேவனிடம் கூறிய யாத்திராகமம் 33:15-16 ஐக் கவனியுங்கள்:

> அப்பொழுது அவன் அவரை நோக்கி: உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும். எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும்; நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான். (யாத்திராகமம் 33:15-16).

“[அவருடைய] சமூகம் [அவர்களுடன்] போக[வில்லை] என்றால்” இஸ்ரவேலை முன்னுக்கு அனுப்ப வேண்டாம் என்று மோசே தேவனிடம் கேட்டதை இங்கே கவனியுங்கள். அவர்களுக்கிடையில் எல்லாம் சரியாக இருக்கும்படி மோசே வேண்டினார். மேலும், ”பூமியின் மீதிலுள்ள எல்லா ஜனங்களிடமிருந்தும்” வேறுபடுத்திக் காட்டியதை, அதாவது அவர்களுடன் தேவபிரசன்னத்தையும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அவர் தேவனிடம் கேட்டார். யாத்திராகமம் 33:17ல், தேவன் இவ்வாறு பதிலளித்தார்:

> அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ சொன்ன இந்த வார்த்தையின்படியே செய்வேன்; என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது; உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார் (யாத்திராகமம் 33:17).

புத்தகத்தின் கடைசி வசனமான யாத்திராகமம் 40:38, ஆசரிப்பு கூடாரத்தில் இஸ்ரவேலருடன் தேவபிரசன்னத்தை எடுத்துக்காட்டுவதில் ஆச்சரியமில்லை:

> இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாப் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது. (யாத்திராகமம் 40:38).

> தேவன் தமது ஜனத்துடன் இருக்கிறார். அவர் மோசேயுடன் முட்புதரில் இருக்கிறார். அவர் தமது மக்களுடன் இந்த அக்கினித் தூணுடனும், மேகத்துடனும் இரவில் அக்கினி ஸ்தம்பம் மூலமாகவும் பகலில் மேக ஸ்தம்பம் மூலமாகவும் அவர்களை வழிநடத்துகிறார். பின்னர் நாம் அடிக்கடி புறக்கணிக்கப்படும் புத்தகத்தின் பகுதிகளான இப்புத்தகத்தின் கடைசி அத்தியாயங்களுக்குச் செல்லும்போது, தேவன் அவர்களுக்கு வாசஸ்தலமாகிய ஒரு கூடாரத்தைக் கொடுக்கிறார். இந்த வாசஸ்தலமாகிய கூடாரத்திற்குள் தேவன் அவர்களுக்கு உடன்படிக்கைப் பெட்டியைக் கொடுக்கிறார். அங்கு அடையாளமாக தேவனுடைய பிரசன்னம் உள்ளது. இதைப் பற்றி நான் விரும்பும் விஷயம் என்னவென்றால், தேவன் தம் மக்களுடன் இருக்க விரும்பும் தேவன் என்பதை நாம் காண்கிறோம். இது என்னைப் பொறுத்தவரை, யோவான் 1 இல் நாம் எதிர்கொள்வதை நன்றாக முன்னறிவிக்கிறது:
>
> அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:14)
>
> பழைய ஏற்பாட்டில் தேவன் தம் மக்களுடன் இருக்க விரும்புகிறார். இறுதியில் புதிய ஏற்பாட்டில் தம் மக்களுடன் இருக்க தேவன் தமது குமாரன் இயேசுவை அனுப்பினார்.
>
> – Dr. டேவிட் டி. லாம்ப்

கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூன்று நிலைகளிலும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு தேவனின் விசேஷித்த ராஜ பிரசன்னத்தின் இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முக்கிய கருப்பொருளை புதிய ஏற்பாடு பயன்படுத்துகிறது. மத்தேயு 18:20 மற்றும் யோவான் 2:19-21 போன்ற வேத பகுதிகள், அவருடைய ராஜ்யத்தின் தொடக்கத்தில், கிறிஸ்து தாமே தனது மக்களுடன் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட ராஜ பிரசன்னமாக இருந்தார் என்பதை விளக்குகின்றன. உண்மையில், யோவான் 1:14 இஸ்ரவேலின் கூடாரத்திற்கும் இயேசுவின் முதல் வருகைக்கும் இடையே இருந்த வெளிப்படையான தொடர்பைக் காட்டுகிறது. இந்த வசனத்தை கவனியுங்கள்:

> அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:14).

”நம்குள்ளே வாசம் பண்ணினார்” என்ற சொற்றொடர் கிரேக்க வார்த்தையான σκηνόω (*ஸ்கெனூ*) என்பதிலிருந்து பெறப்பட்டது. கிரேக்க பழைய ஏற்பாடான செப்டுவஜின்ட்டில் தேவனுடைய பிரசன்னம் கூடாரத்தில் இருப்பதைக் குறிக்கும் யாத்திராகமத்தில் உள்ள எபிரெய வினைச்சொல்லுக்கு שָׁכַן(*ஷாகன்*) இதே வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. எனவே, கிறிஸ்துவின் மனித அவதாரம் என்பதன் அர்த்தம் தேவன் தம்முடைய மக்களை வெற்றிக்கு வழிநடத்தினார் என்பதே என்று இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது.

கூடுதலாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:17 மற்றும் ரோமர் 5:5 போன்ற பகுதிகள் இயேசு பரலோகத்திற்கு ஏறியபோது, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் மீது தம் ஆவியை ஊற்றினார் என்று போதிக்கின்றன. எனவே, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடர்ச்சி முழுவதும், பரிசுத்த ஆவியானவர் அவருடைய சபையில் வாசம் செய்கிறார். தேவன் ஆசரிப்பு கூடாரத்தை தம் பிரசன்னத்தால் நிரப்பியது போல, ஆவியானவர் தம் மக்களைத் தம்முடைய விசேஷமான, தீவிரமான பிரசன்னத்தால் நிரப்புகிறார், அது நாளுக்கு நாள் தேவனின் வழிகாட்டுதலுக்கும் வெற்றிக்கும் உத்தரவாதம் அளிக்கிறது.

நிச்சயமாக, வெளிப்படுத்தின விசேஷம் 21:3 போன்ற புதிய ஏற்பாட்டு பகுதிகள் கிறிஸ்துவின் அவதாரமும் ஆவியின் பிரசன்னமும் புதிய சிருஷ்டிப்பில் தேவனுடைய ராஜ பிரசன்னத்தின் அதிசயத்திற்கு முன்னோடியாக இருக்கின்றன என்று கற்பிக்கின்றன. கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தின் முழுநிறைவில் திரும்பும்போது, அவர் எல்லாவற்றையும் புதிதாக்குவார். முழு சிருஷ்டிப்பும் நமது தற்போதைய போர்வீரரான ராஜாவின் காணக்கூடிய மகிமையால் நிரப்பப்படும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

”யாத்திராகமத்தைப் பற்றிய ஒரு கண்ணோட்டம்” என்ற தலைப்பில் இந்தப் பாடத்தில், அதன் எழுத்தாளர், சந்தர்ப்பம், ஆதி அர்த்தம் மற்றும் நவீன பயன்பாடு உட்பட, மனதில் வைத்துக்கொள்ள சில ஆரம்பக் கருத்துகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். புத்தகத்தை இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிப்பதன் மூலம் யாத்திராகமத்தின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தையும் நாம் ஆராய்ந்தோம். புத்தகம் முழுவதும் தேவனுடைய அரசாட்சியின் பல பரிமாணங்கள் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளன என்பது உட்பட சில முக்கிய கருப்பொருள்களை நாம் பார்த்தோம்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லையில் மோசேயுடன் முகாமிட்டிருந்ததால், அதன் அசல் இஸ்ரவேலர் பார்வையாளர்களுக்கு யாத்திராகமம் புத்தகம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இஸ்ரவேலர்கள் தங்கள் நாட்களில் தேவனுக்காக வாழ்வதற்கான சவால்களைப் பற்றி சிந்தித்தபோது, அவர்களுடைய தேசத்தில் தேவனால் நியமிக்கப்பட்ட தலைவராக மோசேக்கு தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துமாறு யாத்திராகமம் அவர்களை அழைத்தது. எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு அவர்கள் விடுதலையாக்கப்பட்டதில் மோசேயின் பங்கை அந்தப் புத்தகம் அவர்களுக்கு நினைவூட்டியது. மேலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்காக தேவன் அவர்களை எவ்வாறு தயார்படுத்தினார் என்பதை அது அவர்களுக்கு நினைவூட்டியது.

அதே வழியில், இன்று கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, யாத்திராகமம் புத்தகம் கிறிஸ்துவில் தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதன் வெளிச்சத்தில் மோசேயின் அதிகாரத்திற்கு நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்த அழைப்பு விடுக்கிறது. இஸ்ரவேலின் தலைவனாக மோசேயின் மூலம் தேவன் செய்ததைப் போலவே, கிறிஸ்துவின் மூலம் தேவன் எவ்வளவு அதிகமாகச் செய்திருக்கிறார் என்பதை யாத்திராகமம் புத்தகம் காட்டுகிறது. கிறிஸ்துவில், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் சாத்தானின் ஆதிக்கத்திலிருந்தும் தேவன் நம்மை என்றென்றும் விடுவித்திருக்கிறார். கிறிஸ்துவில், கிறிஸ்துவின் ஆவியின் பிரசன்னத்தையும், நம்மை வழிநடத்துவதற்கான வழிமுறைகளையும் தேவன் நமக்கு அளித்துள்ளார். இந்த வெளிச்சத்தில், புதிய வானத்திலும் புதிய பூமியிலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நம்முடைய நித்திய சுதந்தரத்திற்கு அவர் நம்மை வழிநடத்துகையில், கிறிஸ்துவை நாம் எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதைப் பற்றி மேலும் மேலும் அறிந்துகொள்ள எண்ணற்ற வாய்ப்புகளை யாத்திராகமம் நமக்கு வழங்குகிறது.